# Table of Contents

அழியாச்சுடர்....................................................................................................1
- மௌனி..........................................................................................................1
அவர் பெயர் முக்கியமில்லை.......................................................................................6
- எஸ்.ராமகிருஷ்ணன்..........................................................................................6
தமிள் படிச்ச அளகு..................................................................................................19
- கி.ராஜநாராயணன்............................................................................................19
சுந்தரி....................................................................................................................20
- மௌனி..........................................................................................................20
விலாங்கு.................................................................................................................22
- ஜெயமோகன்....................................................................................................22

அழியாச்சுடர்

– மௌனி

வழக்கமாகக் காலையில் அவனைப் பார்க்கப் போவது போல நான் அன்று செல்லவில்லை. உதயத்திலிருந்தே உக்கிரமாக வெய்யில் அடித்தது. தெளிவுற விளங்காத ஒருவித அலுப்பு மேலிட்டதனால் நான் வீட்டை விட்டே வெளிக்கிளம்பவில்லை. மாலையில் சென்று அவனைப் பார்த்துக் கொள்ளலாம் என்று எண்ணி, மிக உஷ்ணமான அன்று பகலை, என் வீட்டிலேயே கழித்தேன்.

நேற்று முன்தினம் இது நிகழ்ந்தது. மாலை நாலரை மணி சுமாருக்கு நான் அவன் வீட்டை அடைந்தேன். அவன் என் பாலிய சிநேகிதன். நான் சென்றபோது, தன் வீட்டின் முன் அறையில், அவன் வழக்கம்போல் ஒரு நாற்காலியில் அமர்ந்திருந்தான். திறந்த ஜன்னலுக்கு எதிரே உட்கார்ந்து இருந்த அவன் ஏதோ ஆழ்ந்த யோசனையில் இருப்பதாக எண்ணித் திடீரென உட்புகச் சிறிது தயங்கினபடியே ரேழியில் நின்றேன். என் பக்கம் பாராமலே, என்னை அவன் உள்ளே அழைத்தது திடுக்கிடத்தான் செய்தது. அவனுடைய அப்போதைத் தோற்றமும் கொஞ்சம் ஆச்சரியமளிப்பதாகவே இருந்தது. உள்ளே ஒரே நாற்காலியும் அதன் அருகில் ஒரு மேஜையும் இருந்தன. மற்றும் எதிரில் வீதிப் பக்கம் ஜன்னல் திறந்திருந்தது.

`காபி சாப்பிட்டாகிவிட்டதா?' என்று கேட்டுக்-கொண்டே நான் உள்ளே நுழைத்தேன்.

`இல்லை' என்றான்.

`என்ன?'

`ஆமாம். காலை முதல் இங்கே உட்கார்ந்தபடிதான் இருக்கிறேன் _ யோசனைகள்_' எனக் கொஞ்சம் சிரித்தபடி கூறினான்.

என் நண்பன் சிரிப்பதை மறந்து விட்டான் என்பதும், எனக்குத் தெரிந்து சமீப காலத்தில் சிரித்ததே இல்லை என்பதும் உண்மை. அப்போது அவன் சிரித்ததும் உணர்ச்சி இழந்த நகைப்பின் ஒலியாகத்தான் கேட்டது. அவன் பேசின தொனியும், என்னைப் பாராது வெளியே வெறித்துப் பார்க்கும் பார்வையும் எனக்கு என்னவோ போல் இருந்தன. மேலே நான் யோசிக்க ஆரம்பிக்குமுன் அவன் பேச ஆரம்பித்தான். அவன் சமீப காலமாக ஒருவித மனிதனாக மாறிவிட்டான்.

`இங்கே வாப்பா; இங்கே இப்படி உட்காரு; எதிரிலே பார்' என்று சொல்லிக்கொண்டே எழுந்து மேஜையின் மீது அவன் உட்கார்ந்து கொண்டான்; நான் நாற்காலியில் அமர்ந்தேன்.

`நான் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து அதோ அங்கே என்ன தெரிகிறது பார்' என்றான்.

இலையுதிர்ந்து நின்ற ஒரு பெரிய மரம், பட்ட மரம் போன்ற தோற்றத்தை அளித்துக்கொண்டு எனக்கு எதிரே இருந்தது. வேறு ஒன்றும் திடீரென என் பார்வையில் படவில்லை. தனிப்பட்டு, தலைவிரிகோலத்தில் நின்று, மௌனமாகப் புலம்புவது போன்று அம்மரம் எனக்குத் தோன்றியது. ஆகாயத்தில் பறந்து திடீரென அம்மரக் கிளைகளில் உட்காரும் பட்சிகள், உயிர் நீத்தவையேபோல் கிளைகளில் அமைந்து ஒன்றாகும். அவற்றின் குரல்கள் மரண ஒலியாக விட்டுவிட்டுக் கேட்டுக் கொண்டிருந்தன. சிறிது சென்று, ஒன்றிரண்டாகப் புத்துயிர் பெற்றுக் கிளைகளை விட்டு ஜிவ்வெனப் பறந்து சென்றன. அதிக நேரம் அம்மரத்தின் தோற்றத்தைப் பற்றி நான் யோசித்துக் கொண்டிருக்கவில்லை. காலையிலிருந்து உக்கிரமான வெய்யிலில் பாதி மூடிய கண்களுடனும், வெற்று வெளிப்பார்வையுடனும் கண்ட தோற்றங்கள் என் நண்பனுக்கு எவ்வெவ்வகை மனக் கிளர்ச்சிக்குக் காரணமாயினவோ என்பதை என்னால் அறிந்து கொள்ள முடியவில்லை.

`என்ன?' என்று அவன் கேட்டது என்னைத் தூக்கிவாரிப் போடும்படி இருந்தது.

`அதோ, அந்த மரந்தான்' என்றேன்.

`என்ன? மரமா? சரி' என்று சொல்லிக்கொண்டே உட்கார்ந்தபடியே சிறிது குனிந்து அதைப் பார்த்துவிட்டு அவன் பேசலானான்.

`ஆமாம்; அதுதான்; ஆகாயத்தில் இல்லாத பொருளைக் கண்மூடிக் கை விரித்துத் தேடத் துழாவுவதைப் பார்த்தாயா? ஆடி அசைந்து நிற்கிறது அது; ஆட்டம் ஓய்ந்து நிற்கவில்லை….. மெல்லெனக் காற்று மேற்கிலிருந்து அடிக்கும். காதல் முகந்த மேகங்கள், கனத்து மிதந்து வந்து அதன்மேல் தங்கும்…… தாங்காது தளர்ந்து ஆடும்…… விரிக்கப்பட்ட சாமரம் போன்று ஆகாய வீதியை மேகங்களிலிருந்து சுத்தப்படுத்துவதா அது….? அல்லது தளிர்க்கும் பொருட்டு மழைத்துளிகளுக்கு ஏங்கியா நிற்கிறது…? எதற்காக…?'

`என்ன நீ பெரிய கவியாகிவிட்டாயே! ஏன் உனக்கு இவ்வளவு வேகமும் வெறுப்பும்…..!' என்றேன். அவன் பேச்சும் வார்த்தைகளும் எனக்குப் பிடிக்கவில்லை.

`சொல்லுகிறேன் கேள்: நேற்று நேற்று என்று காலத்தைப் பின்கடத்தி மனம் ஒன்பது வருஷத்திற்கு முன்பு நடந்த ஒரு சம்பவத்திற்குச் சென்று நின்றது. அந்த நிகழ்ச்சியை நினைப்பூட்டிக் கொண்ட பிறகு என் நிலை தடுமாறிப் போய்விட்டது. என்னவெல்லாமோ என் மனம் சொல்ல முடியாத வகையில் அடித்துக்கொள்ளுகிறது. அவ்வளவுதான்…' எனச் சொல்லி நிறுத்தினான். அவன் கண்கள், காண முடியாத அசரீரியான ஏதோ வஸ்துவைப் பார்க்கத் துடிப்பதுபோல என்றுமில்லாதபடி ஜொலித்தன. என்னிடம் சொல்லுவதற்கு அல்ல என்பதை அவன் பேசும் வகை உணர்த்தியது.

`ஆம், ஒன்பது வருஷத்துக்கு முன்பு நான் கல்லூரி மாணவன். எனக்கு அப்போது வயது பதினெட்டு, அக்கால நிகழ்ச்சி ஒன்றே இன்று காலை முதல் பல்லவியாகப் பலவிதமான கற்பனையில் தோன்றுகிறது. அப்போது நான் பார்ப்பதற்கு எப்படி இருப்பேன் என்பது உனக்கு ஞாபகம் இருக்கலாம்…'

`நன்றாக… நீ…'

`சரி, சரி, என் நீண்ட மூக்கு, முகத்திற்கு வெகு முன்பாக நீண்டு செல்லுபவர்களைத் திருப்பி இழுப்பது போல வளைந்திருக்கும். அதன் கீழ் மெல்லிய உதடுகள் மிருதுவாகப் பளீரென்ற பல் வரிசைகளைப் பிறர் கண்கூசச் சிறிது காண்பிக்கும். அப்போதுதான் நான் கிராப் புதிதாகச் செய்து கொண்டேன். நீண்டு கறுத்துத் தழைத்திருந்த என் கூந்தலைப் பறிகொடுத்ததாகவே பிறர் நினைக்கும்படி, படியாத என் முன் குடுமியை, என் கையால் நான் அடிக்கடி தடவிக்கொள்ளுவேன். குறுகுறுவென்ற கண்களோடு என் அழகிலேயே நான் ஈடுபட்டு மதிப்பும் கொண்டிருந்தேன். அப்போது என்னை அநேகர் பார்த்திருக்கலாம். என்னைப் பற்றிய அவர்களுடைய எண்ணங்களை நான் கண்டுகொள்ளவில்லை. இப்போதோவெனின் நான் பார்ப்பது வறட்டுப் பார்வைதான். என்னுடைய கண்கள் வறண்டவை தாமே! என் அழகு இளமையிலேயே முடிவடைந்து விட்டது போலும். ஆனால், என் வாழ்க்கை இளமையில் முடியவில்லையே. அவளும் என்னைப் பார்த்தது உண்டு.'

`அவள் யார்?' என்றேன் நான்.

`ஆமாம், அவளும்: சொல்லுவதைக் கேள். நான் கோவிலுக்குப் போய் எத்தனை வருஷமாகிறது? அந்தத் தினத்திற்குப் பின்பு, நேற்று வரையில் நான் கோவிலுக்குப் போனதில்லை. அதற்கு முன் அடிக்கடி போய்க்கொண்டு இருந்தேன். நீயும் என்னோடு வருவதுண்டே. நான் சொல்லும் அன்றிரவிலும் நீ என் பக்கத்தில் இருந்தாய்.

`அது திருவிழா நாள் அல்ல... அவளும் வந்திருந்தாள். அவள் வருவது எனக்குத் தெரியாது. நாம் கோவிலை விட்டு வெளி வந்தபோது உள்ளே போய்க் கொண்டிருந்த அவளை இருவரும் கோவில் வாயிலில் சந்தித்தோம். அவளுக்கு அப்போது வயது பதின்மூன்று இருக்கலாம். அவள் சட்டென்று என்னைத் திரும்பிப் பார்த்தாள். அவள் பார்வையைத் திருப்பியது நானாக இருக்கலாம். ஆனால் திரும்பி, உன்னையும் கூட்டிக்கொண்டு அவள் பின்னோடு உள் செல்ல என்னை இழுத்தது எது? எனக்குத் தெரியவில்லை. அப்போதைய சிறு பிள்ளைத்தனமாக இருக்கலாம். காதல், அது, இது என்று காரணம் காட்டாதே. காரணமற்றது என்றாலும் மனக்குறைவு உண்டாகிறது. கர்வந்தான் காரணம் என்று வைத்துக் கொள்.

`அவள் பின்னோடு நான் சென்றேன். அநேகந்தரம் அவளைத் தொடக்கூடிய அளவு அவ்வளவு சமீபம் நான் நெருங்கியதும் உண்டு. என் வாய் அடிக்கடி ஏதோ முணுமுணுத்ததும் உண்டு. அது எதையும் சொல்வதற்கல்ல என்பது எனக்குத் தெரியும். ஏனெனில் சொல்லுவதற்கு ஒன்றும் இல்லை.

`ஈசுவர சந்நிதியில் நின்று தலை குனிந்து அவள் தியானத்தில் இருந்தாள். அவளுக்குப் பின் வெகு சமீபத்தில் நான் நின்றிருந்தேன். அவளுடைய கூப்பிய கரங்களின் இடை வழியாகக் கர்ப்பக்கிருகச் சரவிளக்குகள் மங்கி வெகு தூரத்திற்கு அப்பாலே பிரகாசிப்பதாகக் கண்டேன். அவள் கண்கள், விக்கிரகத்திற்குப்பின் சென்று வாழ்க்கையின் ஆரம்ப இறுதி எல்லைகளைத் தாண்டி இன்ப மயத்தைக் கண்டுகளித்தனபோலும்! எவ்வளவு நேரம் அப்படி இருந்தனவோ தெரியாது. `காலம்' அவள் உருவில், அந்தச் சந்நிதியில் ஓடாமல் சமைந்து நின்றுவிட்டது.

`தியானத்தினின்றும் விடுபட்டு என் பக்கம் அவள் திரும்பிய போது ஒரு பரவசம் கொண்டவனேபோல என்னையும் அறியாதே `உனக்காக நான் எது செய்யவும் காத்து இருக்கிறேன்; எதையும் செய்ய முடியும்' என்று சொல்லி விட்டேன்! நீயும், அவளுடன் வந்தவர்களும் சிறிது எட்டி நின்றிருந்தீர்கள். உங்கள் காதுகளில் அவ்வார்த்தைகள் விழவில்லை. ஆனால் அவள் காதில் விழுந்தன என்பது நிச்சயம். அவள் சிரித்தாள்.

`அவளுக்கு மட்டுந்தானா நான் சொன்னது கேட்டது என்பதில் எனக்கு அப்போதே சந்தேகம். உள்ளிருந்த விக்கிரகம் எதிர்த் தூணில் ஒன்றி நின்ற யாளி அவையும் கேட்டு நின்றன என்று எண்ணினேன். எதிரே லிங்கத்தைப் பார்த்தபோது கீற்றுக்குமேலே சந்தனப் பொட்டுடன் விபூதி அணிந்த அந்த விக்கிரகம், உருக்கொண்டு புருவஞ் சுழித்துச் சினங்கொண்டது. தூணில் ஒன்றி நின்ற யாளியும் மிகமருண்டு பயந்து கோபித்து முகம் சுழித்தது; பின்கால்களில் எழுந்து நின்று பயமூட்டியது. அவளைப் பார்த்தேன். அவள் மறுபக்கம் திரும்பி இருந்தாள். பின்னிய ஜடை பின்தொங்க, மெதுவாகத் தன்னோடு வந்தவர்களுடன் சென்றாள். நான் அவளைச் சிறிது தொடர்ந்து நோக்கி நின்றேன். ஆழ்ந்து அமுங்கிய உலக நிசப்தத்தைக் குலைக்க அவளுடைய சதங்கைகள் ஒலிக்கும் ஒலி அவசியம் போலும்! வந்தவர்களுடன் குதூகலமாகப் பேசி, வார்த்தைகளாடிக்-கொண்டே கால் சதங்கைகள் கணீரென்று ஒலிக்கப்போய் விட்டாள். சந்நிதியின் மௌனம் அவளால் உண்டான சப்தத்தின் எதிரொலியில் சிதைவுற்றது. வௌவால்கள் கிரீச்சிட்டுக் கொண்டு குறுக்கும் நெடுக்குமாகப் பறந்தன.'

என் நண்பன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே என் மனம் ஓடியது. அது கட்டுக்கடங்காமல் சித்திரம் வரைய ஆரம்பித்தது _ கோவில், சந்நிதானம், ஆம். பகலிலும் பறக்கும் வௌவால்கள் பகலென்பதையே அறியாதுதான் கோவிலில் உலாவுகின்றன.

பகல் ஒளி பாதிக்குமேல் உட்புகத் தயங்கும். உள்ளே, இரவின் மங்கிய வெளிச்சத்தில் சிலைகள் ஜீவ களைகொண்டு நிற்கின்றன. ஆழ்ந்த அனுபவத்திலும் அந்தரங்கத்திலும் மௌனமாகக் கொள்ளும் கூடமான பேரின்ப உணர்ச்சியை வளர்க்கச் சிறப்பித்ததுதானா கோவில்? கொத்து விளக்குகள் எரிந்து கொண்டிருக்கும். அதன் பிரகாசத்தில் நடமாடும் பக்தர்களுக்கும், அவர்கள் நிழலுக்கும் வித்தியாசம் காணக்கூடாத

திகைப்பைக் கொடுக்கும். அச்சந்நிதானம் எந்த உண்மையை உணர்த்த ஏற்பட்டது? நாம் சாயைகள்தாமா…..? எவற்றின் நடமாடும் நிழல்கள் நாம்?_என்பன போன்ற பிரச்னைகளை என் மனம் எழுப்பியபோது, ஒரு தரம் என் தேகம் முழுவதும் மயிர்க்கூச்செறிந்தது.

என் நண்பனின் பார்வை மகத்தானதாக இருந்தது. ஏதோ ஒரு வகையில், ஒரு ரகசியத்தை உணர்ந்த அவன் பேச்சுக்கள் உன்னதமாக என் காதில் ஒலித்துக்-கொண்டிருந்தன. பேச்சினால் தன் உணர்ச்சிகளை வெளிப்படுத்த முடியாது என நினைக்கும்போது அவன் சிறிது தயங்கி நிற்பான். அப்போது அவன் கண்கள் பிரகாசத்தோடு ஜொலிக்கும்.

`அவள் சென்றாள், பிராகாரத்தைச் சுற்றிவர. பின்னப்பட்டிருந்த அவள் கூந்தல் மெதுவாக அசைந்து ஆடியது. அவள் நடை அமுத்தலாக அவளை முன் செலுத்தியது. `பின்தொடர் பின்தொடர்' என என் மனத்தில் மறுக்க முடியாதபடி ஓர் எண்ணம் தோன்றியது. வெளியில் நான் வாய்விட்டுச் சொல்லவில்லை. பிராகார ஆரம்பத்தில் ஒரு வில்வ மரம் இருந்தது. அதன் இலைகளின் ஊடே நிலவு தெளிக்கப்பட்டு வெண்மைத் திட்டுகளாகப் படிந்து தெரிந்தது. `பிரியமானவளே என்னைப் பார்' என்று மனத்தில் நான் சொல்லிக் கொண்டேன். அவள் என்னைத் திரும்பிப் பார்த்தாள். அவளும் `பின்தொடர்' என்று சொல்லுவதைத்தான் அவள் பார்வையில் கண்டேன். ஏதோ ஒரு சப்தம் கேட்டது. அது தலைகீழாகத் தொங்கும் ஒரு வௌவாலின் சப்தம்; காதில் சிரித்து மனத்தில் மரண பயத்தைக் கொடுக்கும் சப்தம். வில்வ மரத்தடியிலிருந்து அவளைத் தொடர்ந்து நோக்கி நின்றேன். பிறகு அவள் பின்தொடரச் சென்றுகொண்டு இருந்தேன்.

`பகல் போன்று நிலவு காய்ந்தது. பின் நீண்டு தொடர்ந்த அவள் நிழலேபோன்று நானும் அவளைத் தொடர்ந்தேன். மூலைத் திருப்பத்திற்குச் சிறிது முன்பு அவள் என்னைப் பார்க்கத் திரும்பினாள். நான் சொன்ன வார்த்தைகளைத் திருப்பிக்கொள்ளும்படிக் கேட்டுக் கெஞ்சுவது போல அவள் பார்வை இருந்தது. அவள் வருத்தத்திலும் வசீகரமாகத் தோன்றினாள். அருகில் நெருங்கிய நான் மறுபடியும் ஒரு தரம் `என்ன வேண்டுமானாலும் உனக்காக_' என்று ஆரம்பித்தவன் முழுவதும் சொல்லி முடிக்கவில்லை. நான் திரும்பி வேகமாக வந்துவிட்டேன். அவளும் கீழ்ப் பிராகாரத்திற்குச் சென்றுவிட்டாள். வில்வ மரத்தடியில் நின்றிருந்த உன்னை அடைந்தேன். இருவரும் பேசாது வீடு சேர்ந்தோம்.'

அவன் பேச்சைக் கொஞ்சம் நிறுத்தியபோது, `யார் அவள்? எனக்கு ஞாபகமில்லையே?' என்று கேட்டேன். என்னுடைய கேள்வி அவன் மனத்திலேபடவில்லை. அவன் மேலே பேச ஆரம்பித்தான். எனக்கு ஆத்திரம் மூண்டது.

`அன்று முதல் நான் கோவிலுக்குப் போவதை நிறுத்திவிட்டேன்; எதற்காக நின்றேன் என்பது எனக்குத் தெரியாது. சுபாவமாகத்தான் போவது நின்றுவிட்டது என்று நினைத்தேன்.

`நேற்று இரவு என் மனம் நிம்மதி கொண்டு இருக்கவில்லை. எங்கேயோ அலையத் தொடங்கியது. கோவிலுக்குச் சென்று ஈசுவர தரிசனம் செய்து வரலாமெனப் புறப்பட்டேன். இரவின் நாழிகை கழித்தே சென்றேன். அதிகக் கூட்டமில்லாமல் இருக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய எண்ணம். பெரிய கோபுர வாயிலைக் கடக்கும்போதே, சுவாமியின் கர்ப்பக்கிருகம் தெரியும்.

`வெகு காலமாக, ஜோதி கொண்டு ஜொலிப்பது போன்று நிசப்தத்தில் தனிமையாக ஒரு பெரிய சுடர் விளக்கு லிங்கத்தருகில் எரிந்து கொண்டிருக்கும். அது திடீரெனச் சிறிது மறைந்து பழையபடியே அமைதியில் தெரிந்தது. யாரோ ஒரு பக்தன் கடவுளை வழிபட உள்ளே சென்றான் போலும். நான் மெதுவாகப் போய்க்-கொண்டிருந்தேன். உலகின் கடைசி மனிதன் வழிபாட்டை முடித்துக் கொண்டு அநந்தத்திலும் உலகின் அவியாத ஒளியை உலகில்விட்டுச் சென்றதுபோலத் தோன்றின அந்தத் தீபத்தின் மறைவும் தோற்றமும். தூண்டப்படாது என்னுள் எரிந்த ஒளி நிமிர்ந்து ஜொலிக்கத்தான் நேற்று இது நிகழ்ந்தது. கோவிலில் நான் நினைத்தபடி ஒருவரும் இல்லாமல் இல்லை.

`அவளுக்கு இப்போது இருபத்திரண்டு வயது இருக்கலாம். நாகரிகப் பாங்கில் அவள் இருந்தாள். அவளை இப்போது கோவிலில் கண்டதும், என் மனம் வேதனை கொண்டது. எதிர்பாராது நேர்ந்த இந்தச் சந்திப்பினால் அவளிடம் நான் ஒருவகை வெறுப்புக் கொள்ளலானேன். அவள் என்னைத் தெரிந்து கொள்ளவில்லை என்று நினைத்தேன். இப்போது என்னுடைய நாகரிகப் போக்கு எண்ணங்கள் தடுமாறி, மனமாற்றம் கொள்ளும்

நிலைமையில் இருப்பதால், அவளுடைய அழுத்தலும் நாகரிக நாசுக்கும் எனக்குச் சிறிது ஆறுதலைக் கொடுத்தன. நான், முன்பு அவள் காது கேட்கச் சொன்னவற்றை நினைத்துக் கொண்டபோது, என்னையே நான் வெறுத்துக் கொள்ளாதபடி, அவள் புதுத் தோற்றம் ஆறுதல் கொடுத்தது. முழு வேகத்தோடு அவளை வெறுத்தேன். ஆனால் அவள் கடவுளின் முன்பு தியானத்தில் நிற்கும்போது தன்னுடைய மேற்பூச்சை அறவே அழித்து விட்டாள். கடவுளின் முன்பு மனிதர்கள் எவ்வளவு எழில் கொள்ள முடிகிறது, எத்தகைய மனக்கிளர்ச்சிக்கு உடன்படுதல் முடிகிறது என்பதை அப்போது நான் உணர்ந்தேன்.

`அவள் தியானத்தின் மகிமை என்னைப் பைத்தியமாக்கிவிட்டது. வெறித்து வெறுமனே நிற்கச் செய்தது; ஓர் இன்ப மயம், ஒரு பரவசம். திரும்பிய அவள் என்னைக் கண்டுகொண்டுவிட்டாள். எதிரில் நின்ற தூணை அவள் சிறிது நேரம் ஊன்றிப் பார்த்தாள். என் வாக்கின் அழியாத சாட்சியாக அமைந்து நின்ற அந்த யாளியும் எழுந்து நின்று கூத்தாடியதைத்தான் நான் பார்த்தேன். மேலே உற்று நோக்கியபோது ஐயோ! மற்றொரு யாளி வெகுண்டு குனிந்து என்னைப் பார்த்துக்கொண்டிருந்தது. அவள் பார்க்குமிடத்தைப் பார்த்து நின்ற என் மனம் பதைத்துவிட்டது. என்னை நோக்கி ஆணை இடுபவளாகத் தோன்றினாள். அவள் பார்வை என்னை ஊடுருவித் துளைத்துச் சென்றது. ஒருவன், தன் உள்ளூற உறைந்த ரகசியத்தை, ஒரு பைத்தியத்தின் பகற்கனாவில் பாதி சொல்லிவிட்டு மறைவது போல அவள் பார்வை என்னை விட்டு அகன்றது. உணர்ச்சிகள் எண்ணங்களாக மாறுமுன், அவள் சொன்னது என்ன என்பதை மனம் புரிந்து கொள்ளுமுன், அவள் போய்விட்டாள். குனிந்த என் தலை நிமிர்ந்தபோது அவள் மறுபடியும் என் பக்கம் திரும்பியதை நான் பார்த்தேன். ஆழமான இருண்ட சுரங்கத்தினின்றும் இருமணிகள் மின்னுவதுபோல இரு சொட்டுக் கண்ணீர் அவள் கண்களினின்றும் உதிர்ந்தது.

`நான் விதியின் நிழல். என்னிடம் காதலின் முழு வசீகரக் கடுமையை நீ காணப்போகிறாய்.

`அவள் என்ன சொன்னாள்? அவள் என்ன செய்யச் சொன்னாள்? நான் என்ன செய்ய இருக்கிறது? எல்லாம் ஒரு கனவுதானா? அவள் பேசவில்லை. சத்தத்தில் என்ன இருக்கிறது; பேச்சில்? உருவில் _ சீ சீ! எல்லாம் அர்த்தமற்றவை_உண்மையை உணர்த்த முடியாதவை; எல்லாம் இருளடைகின்றன. இறுகிய பிடிப்பிலும் துவண்டு புகை போன்று நழுவுகின்றன. ஆனால் எல்லாம் மாயை என்பதை மட்டும் உணர்த்தாது `மேலே அதோ' என்று காட்டியும் நாம் பார்த்து அதன் வழியே போகத் தெரிந்துகொள்ளுமுன் மறையவுந்தான் இந்தச் சுட்டு விரல்கள் இருக்கின்றன. இருண்ட வழியில் அடையும் தடுமாற்றத்தில் அகஸ்மாத்தாகத் தாண்டிக் குதித்தாவது சரியான வழியை அடைய மாட்டோமா என்ற நம்பிக்கைதான் நமக்கு இருப்பது.

`அதோ மரத்தைப் பார். அதன் விரிக்கப்பட்ட கோடுகள், அதன் ஒவ்வொரு ஜீவ அணுவும் வான நிறத்தில் கலப்பது தெரியவில்லையா? மெல்லென ஆடும்போது அது வான வெளியில் தேடுகிறது. அது குருட்டுத்தனமாகத்தானே அங்கே தேடுகிறது…..?'

நன்றாக இருட்டிவிட்டது. அவன் வெளியில் வெறித்துப்பார்த்துக் கொண்டு இருக்கும்போது, நான் சொல்லிக் கொள்ளாமலே வெளிக் கிளம்பிவிட்டேன்.

வீதியில் வந்ததும் உயரே உற்று நோக்கினேன். இரவின் வளைந்த வானத்திலே கற்பலகையில் குழந்தைகள் புள்ளியிட்டதுபோல எண்ணிலா நட்சத்திரங்கள் தெரிந்தன. தத்தம் பிரகாசத்தை மினுக்கி மினுக்கி எவ்வளவுதான் கொட்டினும், உருகி மடிந்துபடும் அழிவே கிடையாது போல அவைகள் ஜொலித்தன. மேலே இருப்பதை அறிய முடியாத தளர்ச்சியுடன் ஒரு பெருமூச்செறிந்தேன். நடந்து நடந்து வீட்டை அடைந்தேன்.

இன்று காலையில் அவனை வீட்டில் காணோம். அவன் எங்கே எதற்காகச் சென்றானோ எனக்குத் தெரியாது. அவனுக்குத் தெரியுமோ என்பதும் தெரியாது. எல்லாம் `அவனுக்கு'த் தெரியும் என்ற எண்ணந்தான் அவன் என்பது இருந்தால்.

----------

அவர் பெயர் முக்கியமில்லை

– எஸ்.ராமகிருஷ்ணன்

அந்த இளைஞன் துர்காவை மறுபடியும் கடந்து சென்றான். காய்கறி மார்க்கெட்டுக்கு வந்த அரை மணி நேரத்துக்குள் அவனை மூன்று முறை பார்த்து விட்டாள். அந்தப் பையனுக்கு 20 வயது இருக்கக்கூடும். வெளிறிய ஜீன்ஸும் டி-ஷர்ட்டும் அணிந்து இருந்தான். இடது கையில் ஒரு பித்தளைக் காப்பு.

இவனைப் போன்ற பையன்கள் புதிதாகத் திறக்கப்பட்டுள்ள ஹாம்சன் பொறியியல் கல்லூரியில் படிப்பதற்காக வீடு எடுத்துத் தங்கி இருப்பவர்கள். அவளது வீட்டுக்குப் போகிற வழியில் உள்ள பிள்ளையார் கோயிலை ஒட்டிய வீட்டில்கூட கல்லூரி மாணவர்கள் தான் தங்கியிருக்கிறார்கள். கொடிகளில் நிறையத் துணிகள் காய்வதைக் கண்டிருக்கிறாள்.

இந்தப் பையனும் அப்படி எங்காவது தங்கியிருக்கக்கூடும். இவனைப்போன்ற இளைஞர்கள் வீட்டைவிட்டு வந்த பிறகு சமைக்கக் கற்றுக்கொள்வதில் காட்டும் ஆர்வத்தை வீட்டில் இருக்கும்போது ஒருநாள்கூட ஏன் காட்டுவதே இல்லை? பெண்கள் எந்த ஊரில், எந்த வேலைக்காகப் போனாலும் தாங்களாகவே சமைத்துத்தான் சாப்பிட்டுக்கொள்ள வேண்டும். அல்லது வுமன்ஸ் ஹாஸ்டலில் போடும் சாப்பாட்டினைச் சாப்பிட வேண்டும். மெஸ்ஸில் கணக்கு வைத்துக்கொண்டோ, இரவு நேர பரோட்டாக் கடைகளைத் தேடிப் போய் சாப்பிடும் பெண்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள். வேலை ஒன்று, சம்பாத்தியம் ஒன்றாக இருந்தாலும் இரண்டுவிதமான வாழ்க்கை முறைதானே இருக்கிறது.

அந்தப் பையன் காய்கறி மார்க்கெட்டில் எந்தப் பொருளையும் பேரம் பேசி வாங்குவது இல்லை என்பது கண்கூடாகத் தெரிந்தது. அவன் கையில் ஒரு ஜவுளிக் கடை பை வைத்திருந்தான். காய்கறிகள் வாங்குவதில் அனுபவம் இல்லை என்பது அவன் வாங்கிவைத்திருக்கிற முற்றிய முருங்கைக் காயிலேயே தெரிந்தது. துர்கா காய்கறிகளை வாங்கி முடித்திருந்தாள். இருட்டுவதற்குள் வீட்டுக்குப் போய்விட வேண்டும். வீட்டுச் சாவி அவளிடம் இருந்தது. அலுவலகம்விட்டு ஸ்ரீதரன் வந்து காத்திருந்தால் கத்துவான். புதினா கிடைத்தால் இரவுக்குத் துவையல் அரைக்கலாம் என்று தேடி நடந்தபோது மண்பாண்டக் கடையில் தற்செயலாக அந்த உண்டியலைப் பார்த்தாள். அந்த உண்டியல் மீன் வடிவத்தில் இருந்தது. வெளிர் நீல வண்ணம் அடித்திருந்தார்கள். கண்களும் செவுளும்கூடத் துல்லியம். மீனின் வயிற்றுக்குள் காசு போட்டுவைப்பது என்பது வேடிக்கையானது இல்லையா? துர்கா அந்த உண்டியலைக் கையில் எடுத்துப் பார்த்துத் தனக்குத்தானே சிரித்துக்கொண்டாள்.

சிறு வயதில் ஒரு நாள் கோதையாச்சி சொன்ன கதையில் ஒரு மீன் வயிற்றில் 20 தங்கக் காசுகள் இருந்து, அதை ஒரு மீனவன் எடுத்துப் பணக்காரன் ஆன கதை நினைவில் வந்துபோனது. அவள் சிறுமியாக இருந்த நாட்களில் இதுபோன்ற உண்டியல்கள் எதையும் பார்த்தது இல்லை. அப்போது எல்லாம் செம்மண் நிறத்தில் உள்ள மண் உண்டியல்கள்தான் விற்பனையாகின. இப்போதுதான் எத்தனை விதமான உண்டியல்கள்.

சிறு வயதில் காசு சேர்த்துவைத்து தேர்த் திருவிழாவின்போது விதவிதமான பாசி வளையல், ரிப்பன் எல்லாம் வாங்க வேண்டும் என்று துர்கா ஆசைப்பட்டு இருக்கிறாள். எப்போதாவது காரைக்குளத்தில் இருந்து வரும் கதிரேசன் சித்தப்பா மட்டும் ஊருக்குப் போகும்போது அவளுக்கெனத் தனியே பத்தோ இருபதோ ரூபாய்களைத் தந்துவிட்டுப் போவார். மற்றபடி வீட்டுக்கு வரும் விருந்தாளிகளில் அவளுக்குக் காசு தந்தவர்கள் வெகு குறைவு. கூச்சப்பட்டுக்கொண்டு அவள் கேட்கவும் மாட்டாள்.

அவளது தம்பி சிவப்பிரகாசம் அப்படிக் கூச்சப்பட மாட்டான். காசைக் கேட்டு வாங்கிக்கொள்வான். எவ்வளவு ரூபாய் கிடைத்தாலும் சினிமா பார்ப்பது, ஹோட்டலில் போய் பூரி சாப்பிடுவது, பஜ்ஜி வாங்கித் தின்பது என்று இரண்டு நாட்களுக்குள் செலவழித்துவிடுவான். அம்மா அவனை ஓட்டைக் கை என்று திட்டுவாள். அவர்கள் வீட்டில் காசு சேர்ப்பதில் கெட்டியாக இருந்தவள் தமயந்தி மட்டுமே. அவள் துர்காவைவிட மூன்று வயது மூத்தவள். அந்த கெட்டிக்காரத்தனம்தான் இப்போது அவளை அமெரிக்காவில் வாழவைத்திருக்கிறது. சிறு வயதில் கெட்டிக்காரத்தனமாக உள்ள பலர் பெரியவர்களானதும் தோற்றுப்போய்விடுகிறார்கள். சிலருக்குத்தான் அந்தக் கெட்டித்தனம் வாழ்நாள் பூராவும் அமைந்துவிடுகிறது.

துர்கா உண்டியலின் விலையைக் கேட்டாள். மண்பானைகள் விற்பனை செய்யும் அந்தப் பெரியவர் உண்டியலைக் கையில் வாங்கிப் பார்த்துவிட்டு முப்பது ரூவா குடும்மா என்றார். விலை அதிகம் என்று யோசித்தபடியே பார்த்தாள். ''உண்டியலை வாங்கிக் குடும்மா... உன் மக சந்தோஷப்படுவா'' என்று கடைக்காரர் சொன்னதும் அவளது முகம் மாறியது. திருமணமாகி பதினோரு வருஷங்கள் கடந்த பிறகும் அவளுக்குக் குழந்தை இல்லை. அந்த வலி ஒவ்வொரு விளையாட்டுப் பொருளைப் பார்க்கும்போதும் தெறிக்கவே செய்கிறது. இதற்காகவே டி.வி-யில் குழந்தைகள் தொடர்பான விளம்பரங்கள் வருவதைக்கூடப் பார்க்க மாட்டாள். ஸ்ரீதரன் குழந்தையின்மை பற்றிப் பேசுவதைக்கூட விரும்புவது இல்லை. ஒன்றிரண்டு வருஷங்கள் இருவரும் மாறிமாறி சிகிச்சை எடுத்துக்கொண்டார்கள். ஆனாலும் கர்ப்பம் தரிக்கவே இல்லை. முடிவில் ஒரு நாள் ஸ்ரீதரன் சொன்னான்... 'துர்கா, பிள்ளை பிறக்கிறப்போ பிறக்கட்டும்... ஒருவேளை பிறக்காமலே போயிட்டா, நமக்குக் கொடுத்துவெச்சது அவ்வளவுதான்னு நினைச்சிக்கிடுவோம். இப்படி ஒவ்வொரு டாக்டர்கிட்டயாப் போயி மருந்து மாத்திரை சாப்பிட்டு மாசக்கணக்கில் காத்துக்கிட்டு இருந்து ஏமாந்துபோறது மனசுக்குக் கஷ்டமா இருக்கு. இதுல உன் தப்பு, என் தப்புனு எதுவும் இல்லை. நமக்குக் கொடுப்பினை இல்லே, அவ்வளவுதான்!'

அதைக் கேட்டு துர்கா அழுதாள். ஸ்ரீதரன் அவளைத் தேற்ற முயற்சிக்கவே இல்லை. நீண்ட அழுகைக்குப் பிறகு அவன் சொன்னதுதான் சரி என்று அவளும் ஏற்றுக்கொண்டுவிட்டாள். எப்போதாவது பின்னிரவில் உறக்கம் பிடிக்காமல் இந்த நினைவு மேலோங்கத் துவங்கிவிடும். அப்போது என்ன செய்வது என்று தெரியாமல் முகத்தைப் புதைத்துக்கொண்டு சத்தம் இல்லாமல் அழுவாள். ஸ்ரீதரனும் அப்படித்தான் இருக்கக்கூடும். ஆனால், அவளிடம் அதைக் காட்டிக்கொண்டது இல்லை.

மண்பானை விற்பவருக்கு அவளது சொந்த வலி தெரியுமா என்ன? அவள் அந்தக் கிழவரையே பார்த்துக்கொண்டு இருந்தாள். அவளது நினைப்பு சட்டெனத் தாவி மாறியது. பெண் பிள்ளைகள் மட்டும்தான் உண்டியல் வாங்க வேண்டுமா என்ன? பையன்கள் செலவழிக்கப் பிறந்தவர்கள், பெண்கள் சேமிக்கப் பிறந்தவர்கள் என்று யார் சொன்னது? இந்த உண்டியலே வேண்டாம் என்று சொல்லிவிடலாமா என்று நினைத்தாள். அவளது முகச்சுழிப்பை அறிந்துகொண்டவரைப் போல, 'இருபத்தைந்து ரூபாய் குடும்மா போதும்' என்று உண்டியலை அவள் முன்பாக நீட்டினார். 'வேணாம் இருக்கட்டும்' என மறுத்தபடி அவள் தனது காய்கறிக் கூடையைத் தூக்கிக்கொண்டு கடையைவிட்டு விலகி நடப்பதுபோல நகர்ந்தாள்.

கடைக்காரக் கிழவர் தனது இருக்கையைவிட்டு எழுந்து நின்று, 'ஏம்மா வேணாம்கிறே, பதினஞ்சு ரூபாய்க்குத் தர்றேன், வாங்கிக்கோ' என்றார். அவள் வாங்க வேண்டாம் என்ற நினைப்பில், ''பத்து ரூபாய்க்குத் தருவீங்களா?'' என்று கேட்டாள். அவர் நிமிஷ நேரத் தயக்கத்துக்குப் பிறகு, 'சரி குடு' என்று உண்டியலை ஒரு காகிதத்தில் மடிக்கத் துவங்கினார்.

இதில் காசு சேர்த்துவைத்து என்ன செய்வது? மாசச் சம்பளம் மொத்தமாக அவளிடம்தானே இருக்கிறது. ஆனாலும் சேமிக்கிற காசுக்குத் தனி மதிப்பு இருக்கவே செய்கிறது. பத்ரிநாத்துக்கு ஒரு முறையாவது போய்வர வேண்டும். அவ்வளவு பனியை நேரில் பார்த்ததே கிடையாது. அதிகபட்சம் அவள் அறிந்த ஜில்லிடல் வீட்டு பிரிஜ்ஜில் உறைந்துபோயிருக்கிற பனிக் கட்டியைச் சுத்தம் செய்ய முயன்று கையை வைத்ததுதான்.

பத்ரிநாத்தில்தான் எவ்வளவு பனி! மலைக்குப் போர்வை போர்த்திவிட்டதுபோல. அங்கே போய் வர எவ்வளவு செலவாகும்? இந்த உண்டியல் மொத்தமாக நிரம்பினாலும் ஆயிரம் ரூபாய்கூடத் தேறாதுதானே? பின் எதற்கு இந்த உண்டியல்? ஆனால், உண்டியலைக் கையில் எடுத்த அந்த நிமிஷம் தான் ஒரு சிறுமிபோல ஆனது சந்தோஷமாகத்தான் இருந்தது. அதற்கு விலைதான் அந்தப் பத்து ரூபாய் என்று எடுத்துக்கொள்ள வேண்டியதுதான்.

கிழவர் உண்டியலை அழகாகக் காகிதத்தால் சுற்றினார். தெரு நாய் ஒன்று சாப்பிட எதுவும் கிடைக்காமல் வாலை ஆட்டியபடியே அவள் காலடியில் இருந்த காய்கறிப் பையை நெருங்கி வந்தது. அவள் கையைக் காற்றில் சூவென வீசி நாயை விரட்டிவிட்டு, பர்ஸைத் திறந்து காசை வெளியே எடுத்துக் கிழவரிடம் கொடுத்தாள். உண்டியலைப் பத்திரமாகக் காய்கறிக் கூடைக்குள் வைப்பது எளிதானதாக இல்லை. இதற்காக அவள் வாங்கியிருந்த புடலங்காய்களையும் தேங்காயையும் வெளியே எடுத்துவைத்தாள்.

அப்போது மார்க்கெட்டின் மேற்கு வாசலில் இருந்து ஒருவன் தலைதெறிக்க ஓடி வருவது தெரிந்தது. அவன் ஓங்காரமான குரலில் அலறியபடியே ஓடிவந்தான். அவனைத் துரத்திக்கொண்டு நாலைந்து பேர் ஓடி

வந்தார்கள். கிழவர் கடையைவிட்டு எக்கி வெளியே பார்த்துவிட்டு பீதியான முகத்துடன், 'ஓரமாப் போய் நில்லும்மா' என்று சொல்வதற்குள் ஓடிவந்தவன் வாழை மட்டை சறுக்கி, வெங்காயக் கூடையின் முன்பாக விழுந்தான். துரத்தி வந்தவர்கள் விழுந்துகிடந்த மனிதனைச் சுற்றி வளைத்துக்கொண்டார்கள்.

துர்கா தன் வாழ்வில் முதன்முறையாக ஒரு மனிதனை ஐந்து பேர் சேர்ந்து அரிவாளால் வெட்டுவதை அப்போதுதான் பார்த்தாள். என்ன கோரம் இது? விழுந்துகிடந்தவன் எழுந்து கொள்வதற்காக திமிறித் தவித்தான். அவனது குரல்வளையில் ஒருவன் காலை வைத்து அழுத்த, மற்றவர்கள் அவனது கழுத்தில், அடிவயிற்றில் இடுப்பில் என அரிவாளால் மாறி மாறி வெட்டினர்.

மரண ஓலமும் ரத்தம் ஒழுகத் துடிக்கும் உடலுமாக அந்த மனிதனை அப்படியே போட்டு விட்டு வெட்டியவர்கள் வெளியேறிப் போனார்கள். துர்காவுக்குப் படபடப்பாக வந்தது. தான் ஒரு கொலையைப் பார்த்திருக்கிறோம். ஒரு மனிதன் துடிதுடித்துச் சாவதைக் கண் முன்னே பார்த்திருக்கிறோம். என்ன அவலம் இது? எதற்காகக் கொன்றார்கள்?

துர்காவின் தொண்டையை யாரோ இறுக்கிப் பிடித்து மூச்சு முட்டச்செய்ததுபோல் இருந்தது. அவள் கைகள் நடுங்கத் துவங்கின. அடிவயிற்றினைக் கைகொண்டு பிசைவதுபோல இருந்தது. அங்கிருந்து ஓடிவிட வேண்டும் என மனது பதைபதைக்கத் துவங்கியது.

கடையில் இருந்த கிழவரைக் கூடக் காணவில்லை. அருகில் இருந்த தேங்காய்க் கடை, இலைக் கடை, இஞ்சி பூண்டு விற்கும் கடை ஒன்றில்கூட ஆட்களைக் காணோம். அவள் ஏன்தான் இன்னமும் அங்கேயே நிற்கிறோம் என்ற குழப்பத்துடன் தன் காலடியில் விழுந்துகிடந்த புடலங்காயைப் பார்த்தாள். அதைக் குனிந்து எடுத்துப் பையில் வைப்பதற்குக்கூட அவளிடம் தைரியம் இல்லை. ஓரக்கண்ணால் செத்துக்கிடந்தவனைப் பார்த்தாள். அந்த மனிதனுக்கு 30 வயது இருக்கக்கூடும். கறுப்பு நிற பேன்ட்டும் ஊதா நிறக் கோடுகள் போட்ட முழுக்கைச் சட்டையும் அணிந்திருந்தான். கால்கள் திருகி, முகம் ஒரு பக்கம் புதைந்துகிடந்தது.

யார் அவன், எதற்காக அவனைக் கொன்றார்கள். அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை. எப்படியாவது பாதுகாப்பாக வீட்டுக்குப் போய்விட வேண்டும் என்ற பயம் அவளுக்குள் நிரம்பத் துவங்கியது. ஒவ்வொரு நாளும் காலையில் ஸ்ரீதரன் அலுவலகத்துக்குக் கிளம்பிப் போன பிறகு, துர்கா காய்கறி வாங்க வருவாள். அப்படி வாங்கி முடித்த பிறகு, தெற்கு வாசல் வழியாக வெளியேறி நடந்து மீரான் பழரசக் கடையில் போய் ரோஸ் மில்க் குடித்துவிட்டு, வெயிலேற நடந்து காந்தி நகரில் உள்ள தனது வீட்டுக்குப் போய்ச் சேருவாள். அதற்கு எப்படியும் 20 நிமிடங்கள் ஆகும்.

இன்றைக்கு ஏன் மாலை நேரம் மார்க்கெட்டுக்கு வந்தோம் என்று தன் மீதே ஆத்திரமாக வந்தது. அவள் பதற்றத்துடன் தனது காய்கறிக் கூடையை எடுத்துக்கொண்டு நடக்க ஆரம்பித்தாள். அப்போது சங்கரன்செட்டியார் சந்துக்குள் இருந்து நாற்பது ஐம்பது பேர் கையில் அருவாள் கட்டைகளுடன் மார்க்கெட்டினைச் சூறையாடிய படியே வருவது தெரிந்தது. வந்தவர்கள் 'ஓடு... ஓடு...' என எதிர்ப்பட்டவர்களை வாழைத்தண்டால் அடித்து விரட்டினார்கள்.

அவளும் ஓடத் துவங்கினாள். அவளால் ஓட முடியவில்லை. உடல் ஏன் இப்படிக் கனத்துப்போயிருக்கிறது. கால்களை எடுத்துவைக்க முடியாமல் மூச்சு வாங்கத் துவங்கியது. காய்கறிக் கூடை வேறு ஒரு பக்கம் இழுத்தது. கேரட்டும் பீட்ரூட்டும் பூசணிக்காயும் விசித்திரமான பொருள்களைப் போலத் தோன்றின. பையை அப்படியே போட்டுவிட்டு ஓடிவிடலாமா என்று கூட யோசித்தாள். ஆனால், அப்படி விட மனசு வரவில்லை. மிகுந்த பிரயாசையுடன் அவள் கண்களை மூடிக்கொண்டு வடக்கு நோக்கி ஓடினாள்.

கண்களைத் திறந்து பார்த்தபோது வெல்லக் கிட்டங்கி அருகே வந்திருப்பது தெரிந்தது. 200 அடிகூட இருக்காது. இவ்வளவுதான் தன்னால் ஓட முடிந்திருக்கிறதா? வடக்கு வாசலுக்குப் போக இன்னும் நிறைய ஓட வேண்டுமே. ஏன் உடம்பு ஒத்துழைக்க மறுக்கிறது? அவள் பையை இழுத்துக்கொண்டு வேகமாக நடக்க ஆரம்பித்தாள்.

ஜீன்ஸ் அணிந்த பையன் தற்செயலாகக் கண்ணில்பட்டான். அவன் இன்னொரு பக்கம் போய்க்கொண்டு இருப்பது தெரிந்தது. அவனை அழைக்கலாமா என்று யோசிப்பதற்குள் அந்தப் பையன் மறுபக்கம் போய்விட்டு இருந்தான். துர்கா ஓட முடியாமல் ஓடிக்கொண்டு இருந்தாள். யாரோ பின்னால் துரத்திவந்து அவளை

அமுக்கிப் பிடித்து விடப்போவதுபோல் உணர்ந்தாள். குதிகால் வலிக்க ஆரம்பித்தது. கெண்டைச் சதைகள் இறுகக் கவ்விக்கொண்டதைப் போலாகின.

துர்கா பத்தாம் வகுப்பு வரை பள்ளி மைதானத்தில் ஓடியிருக்கிறாள். அதன் பிறகு, எம்.எஸ்சி. படிக்கும் வரை ஓடியதாக ஞாபகமே இல்லை. ஒரே ஒரு முறை மதுரையில் ராமேஸ்வரம் ரயிலைப் பிடிப்பதற்காக பிளாட்ஃபாரத்தில் ஓடியிருக்கிறாள். அதுவே மார் அடைப்பதுபோல வந்து ரயிலில் அன்றிரவு சாப்பிடக்கூட முடியாமல் போனது.

அவளுக்குப் பள்ளி வயதில் கூடைப் பந்து விளையாடுவது பிடிக்கும். தடகளப் போட்டியில் வேகமாக ஓடவும் செய்வாள். திருமணத்தோடு எல்லாமும் கைவிட்டுப் போய்விட்டது. இன்றைக்குத்தான் அவள் உடல் எடை எவ்வளவு பெரிய பாரம் என்பதை அவள் முழுமையாக உணர்ந்தாள். இத்தனை வருடங்கள் அந்த மார்க்கெட்டுக்கு வந்து போனபோதும் கிட்டங்கி பக்கம் எல்லாம் அவள் வந்ததே கிடையாது. ஒரே புகையிலை நாற்றமாக இருந்தது. அது சுருட்டுப் புகையிலை மற்றும் பீடி கம்பெனிகளின் கடைகள் உள்ள பகுதி. அந்தப் பக்கம் கடந்தாலே, புகையிலை வாடை மூச்சைத் திணறச்செய்யும். ஆனால், இன்றைக்கு அதற்குள்ளாகத்தான் நடந்தாள்.

இதற்கு மேல் வேகமாக நடக்க முடியாது என்பதுபோல அவளது கால்கள் நடுங்கின. அவள் பெருமூச்சிட்டபடியே நின்று திரும்பிப் பார்த்தாள். அவள் வயதையத்த ஒரு பெண் தனது இரண்டு பிள்ளைகளை இழுத்துக்கொண்டு ஓடினாள். அந்தப் பிள்ளைகள் தாயைவிட வேகமாக முன்னால் ஓடினார்கள். "ஜெயா... ஓடாதே நில்லு. கேசவ் சொன்னாக் கேளுடா... அம்மா வர்றேன்" என்று அந்தப் பெண் கத்திய படியே அவர்கள் பின்னால் ஓடினாள். அந்தப் பெண்ணாலும் ஓட முடியவில்லை. பிள்ளைகளை அழைக்கும் அவளுடைய குரல் உடைந்து சிதறுவதுபோல் இருந்தது. அவள் தன் நெஞ்சைப் பிடித்தபடியே போய்க்கொண்டு இருந்தாள்.

வடக்கே இருந்து அரிசிப் பொரி விற்கும் ஓர் ஆள் தனது சைக்கிளைத் தள்ளியபடியே வேகமாக வந்தான். அவன் பயத்தோடு ஓடிய ஆட்களைப் பார்த்துச் சொன்னான், "வாழை மண்டியில பெட்ரோலை ஊத்திப் பத்தவெச்சிருக்காங்க. அந்தப் பக்கம் போக முடியாது. தீ கொழுந்துவிட்டு எரியுது. ராமசாமி தியேட்டர் பின்னாடி உள்ள சந்து ஒண்ணுதான் வெளியே போற வழி. படுபாவிப் பயக மார்க்கெட்ல வெச்சு எல்லாரையும் உயிரோடுகொல்லப் போறாங்க. எனக்குக் கண்ணைக் கட்டிக்கிட்டு வருது. எதுக்குத்தான் இப்படி சாதி வெறி பிடிச்சு அடிச்சிக்கிடுறாங்களோ..?"

வாழை மண்டியில் பற்றிய தீயின் காரணமாகக் காற்றெங்கும் புகை குபுகுபு எனப் பரவத் துவங்கியது. கண்ணில் புகைபட்டு எரிச்சல் உண்டாகியது. நெருப்பு பற்றிக்கொண்டுவிட்டால் எளிதாகக் கூரை வேய்ந்த கடைகள் யாவும் தீப்பற்றிக்கொண்டுவிடும். அந்தப் பொரி விற்பவன் சொன்னதுபோல கூட்டத்தோடு சிக்கி சாகப்போகிறோமா? ஏன் இப்படி மார்க்கெட்டில் மாட்டிக்கொண்டு யார் கையாலோ சாகப்போகிறோம்? நினைக்கவே அவளுக்கு அழுகையாகவும் பயமாகவும் வந்தது.

ஆட்கள் அங்கும் இங்கும் ஓடினர். எந்தப் பக்கம் போவது என்று புரியாமல் அவளும் கூட்டத்தோடு நெரிசலில் சிக்கினாள். ஒரு ஆள் மண்டை உடைந்து கன்னத்தில் ரத்தம் வழிய சேமியா பாக்கெட் விற்கும் கடையின் முன்பாக உட்கார்ந்து அழுதுகொண்டு இருந்தான். அந்தப் பக்கம் போகாமல் விலகி இடதுபுறம் ஒதுங்கி நடக்க ஆரம்பித்தாள். சாக்கடை உடைந்து ஓடியது. வழி எங்கும் ஒரே அழுகல் தக்காளிகளும் முட்டைக்கோஸ் இலைகளுமாக இருந்தன. அதற்குள் எப்படிக் கால்வைத்து நடப்பது என்றே தெரியவில்லை.

யாரோ சிலர் ஆவேசத்துடன் எதிர்ப் பக்கம் இருந்து ஓடி வந்தனர். நடக்க நடக்க அடைத்துச் சாத்தப்பட்டகடைகளாகத் தெரிந்தன. வெளியேறும் வழியே காணோம். தொலைவில் ஒரு பெண் அலறும் ஓசை கேட்டது. என்ன செய்கிறார்கள் அந்தப் பெண்ணை? எங்கே அது நடக்கிறது? அந்தப் பெண்ணின் அலறல் சத்தத்தைத் தொடர்ந்து, 'அய்யய்யோ... அய்யய்யோ...' என்ற கூக்குரல் எழுந்து அடங்கியது.

எந்தப் பக்கம் இருந்து யார் வருகிறார்கள், யாரை அடித்துக் கொல்கிறார்கள் என்று தெரியவில்லை. ஆனால், எலிப் பொறிக்குள் சிக்கிய எலி ஓடுவதுபோலக் குழப்பத்துடன் ஆட்கள் அங்கும் இங்கும் ஓடினர். துர்கா எந்த வழியாகப் போவது என்று புரியாமல் மூடிக்கிடந்த சர்பத் கடையின் மரத்தூணைப் பிடித்துக்கொண்டு சாய்ந்து அழுதாள். அவள் நின்றிருந்த இடத்தில் இருந்து சில அடிகள் தொலைவில் லுங்கி கட்டிய ஆளைப் பத்துப் பேர்

சேர்ந்து அடித்துக்கொண்டு இருந்தார்கள். அவர்களைக் கடந்துபோனால் மட்டுமே பிரதான சாலைக்குப் போக முடியும். ஆனால், அதை எப்படிக் கடந்து போவது? இத்தனை பேர் சேர்ந்து ஒரு ஆளை உருட்டுக்கட்டையால் தாக்குகிறார்களே என்று துர்காவுக்கு நடுக்கமாக இருந்தது.

துர்கா அப்போதுதான் கவனித்தாள். மூடிக்கிடந்த புகையிலைக் கடை ஒன்றின் சாக்குப் படுதாவுக்குள் அந்த ஜீன்ஸ் அணிந்த பையன் ஒடுங்கி நின்றிருந்தான். அவனும் தன்னைப் போலவே பயந்துபோனவனாக ஒளிந்து இருக்கிறான்போலும். கும்பல் வெளியேறும் வரை ஒதுங்கியிருப்பது நல்லதுதானே என்று தோன்றியது. அவள் மெதுவாகப் படுதாவை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

சாக்குப் படுதாவில் இருந்த சிறிய துவாரத்தின் வழியே அந்தப் பையன் அவள் வருவதைக் கண்டிருக்க வேண்டும். தனது கைகளை நீட்டி அவளை மறைவுக்குள் இழுத்துக்கொண்டான். ஆள் உயரப் படுதாவுக்குள் அவள் வந்து நின்றபோது அதற்குள் மறைந்துகொண்டுவிட்டால் வெளியே யாருக்கும் சுத்தமாகத் தெரியாது என்பது புரிந்தது. அந்தப் பையன் இறுக்கமான முகத்துடன் நல்லா உள்ளே வந்து நில்லுங்க என்றான். அவன் கைகளில் காய்கறிப்பை இல்லை. ஒருவேளை வீசி எறிந்திருக்கக் கூடும். அவன் தணிவான குரலில் சொன்னான், ''அந்த சந்து வழியா போனா வெளியே போற வழி இருக்கு. அந்த ஆட்கள் போனதும் வெளியே போயிரலாம்.'' அவள் தலையாட்டிக்கொண்டாள். அவள் கணவனைத் தவிர வேறு எந்த ஆணோடும் இவ்வளவு நெருக்கமாக ஒட்டிக்கொண்டு நின்றது இல்லை. அவனது கைகள் தற்செயலாக உரசுவதுபோல உரசிக்கொள்கின்றன. அவனது உடல் மணம், வியர்வை வாடை, மூச்சுக் காற்று, ச்சே... என்ன நினைப்பு அது. இந்தக் கும்பல் கலைந்துபோவதற்கு எவ்வளவு நேரமாகும்?

திருமண நாள் அன்று அவள் கணவனோடு புகைப்படம் எடுப்பதற்கு இவ்வளவு நெருக்கமாக நின்றிருக்கிறாள். அதன் பிறகு இன்றைக்குத்தான் வேறு ஓர் ஆணோடு நின்றிருந்தாள். காய்கறிப் பையைக் கீழே வெச்சிக்கோங்க என அவனாகப் பிடுங்கிக் கீழேவைத்தான். அவன் பக்கம் திரும்பிப் பார்க்கவே வேண்டாம் என்பதுபோல அவள் வேறு பக்கம் பார்த்துக்கொண்டே இருந்தாள். அவன் எதையோ யோசிப்பவனைப் போல நகத்தைக் கடித்துக்கொண்டே இருந்தான்.

எப்படியாவது வீடு போய்ச் சேர்ந்துவிட்டால் போதும் என்றிருந்தது. அந்தப் பையன் பொறுமை அற்றவனைப் போல அடிக்கடி சாக்குப் படுதாவைத் தூக்கி வெளியே ஆட்கள் போய்விட்டார்களா என்று பார்த்துக்கொண்டே இருந்தான். அவனோடு அப்படி ஒன்றாக நிற்பது அவளுக்கு என்னவோ செய்தது. அதை அவனும் உணர்ந்தானா என்பது தெரியவில்லை. வெளியே மாலை அடங்கி இரவு எழுந்தது. சாலையோர விளக்குகளின் வெளிச்சம் அவர்கள் நின்றிருந்த இடத்தின் அருகே நீரைப்போல ஓடியது. துளித் துளியாகச் சொட்டிக் கடந்துபோவதுபோல நிமிஷங்கள் கரைந்து கொண்டு இருந்தன. அவன் எதையோ நினைத்துப் பெருமூச்சிட்டபடியே தலையைக் குலுக்கிக்கொண்டான். துர்கா அவனைக் கவனிக்காதவள்போலவே நின்று இருந்தாள். அவன் எதையோ பேச விரும்பியவனைப் போல தொண்டையைச் செருமிக்கொண்டான்.

அவனோடு என்ன பேசுவது என்று அவளுக்குப் புரியாமல் அமைதியாக இருந்தாள். அவளது பையில் இருந்த உண்டியலைக் கவனித்தவனைப் போலக் கேட்டான்...

''இந்த உண்டியலை யாருக்காக வாங்கிட்டுப் போறீங்க?''

''எனக்குத்தான்.''

''இந்த வயசுல உண்டியல்ல சேர்த்துவெச்சு என்ன வாங்கப்போறீங்க?''

''சும்மா சேக்கணும்னு தோணுது... அதான்!''

''உண்டியலை உடைக்கிற நாள்ல அழுவீங்களா?''

''இல்லே... எதுக்குக் கேட்குறீங்க?''

''நான் அழுதிருக்கேன். எங்கப்பா எனக்குத் தெரியாம என் உண்டியலை எடுத்து உடைச்சி காசை எடுத்துட்டுப் போயிடுவார். அதுல இருந்து நான் உண்டியலே சேக்குறது இல்ல!''

ஒரு பள்ளிச் சிறுவனைப்போல அவன் பேசியது அவளுக்குப் பிடித்திருந்தது. இவனோடு பேசுவதில் தப்பொன்றும் இல்லை என்று இணக்கமாக உணர்ந்தாள்.

''ஹாம்சன்ல படிக்கிறீங்களா?'' என்று கேட்டாள்.

''ஃபர்ஸ்ட் இயர். நீங்க என்ன படிக்கிறீங்க...'' என்றான் அவன்.

வேண்டும் என்றே கேட்கிறான் என்பது புரிந்தது. ''ஹவுஸ் ஒய்ஃப்'' என்றாள். அவன் தலையசைத்துவிட்டுத் தனக்குத்தானே சிரித்துக்கொண்டான். எதற்குச் சிரிக்கிறான்? ஹவுஸ் ஒய்ஃப் என்பதில் சிரிப்பதற்கு என்ன இருக்கிறது? அவன் ஏதோ யோசனை செய்தவனைப் போல அமைதியாகிவிட்டான். அவளுக்கு அந்தப் படுதாவின் பின்னால் நிற்பது மூச்சுமுட்டுவதுபோல் இருந்தது. கைகளால் முகத்தின் முன்னால் வீசிக்கொண்டாள்.

அந்தப் பையன் அதன் பிறகு அவளிடம் எதுவும் பேசவில்லை. நீண்ட காத்திருப்பின் பிறகு, சாக்குப் படுதாவை விலக்கி வெளியே பார்த்தான். தொலைவில் யாருமே இல்லை. அந்தக் கும்பல் போயிருந்தது. அவள் குனிந்து தனது காய்கறிப் பையை எடுத்துக்கொண்டாள். அவனுக்கு நன்றி சொல்ல வேண்டும்போல் இருந்தது. மெல்லிய புன்னகையோடு திரும்பி அவனை ஏறிட்டுப் பார்த்த போது, அவன் ஒரு நிமிடம்கூட யோசிக்காமல் அவள் தோளைப் பிடித்து இழுத்து, அவள் முகத்தைத் தன் முகத்தோடு பொருத்தி உதட்டோடு அழுத்தி முத்தமிட்டான்.

அவள் விலக்க முயன்றாள். ஆனால், அவன் விடவில்லை. ஐஸ் கட்டியைப் பல்லால் கடித்துத் தின்றதுபோன்ற சிலிர்ப்பூட்டும் முத்தம். அதிர்ச்சியில் இருந்து மீள முடியாமல் நின்ற அவளைவிட்டு விலகி, படுதாவுக்கு வெளியே நின்று சோம்பல் முறித்தவனைப் போலச் சிரித்தான். பிறகு, அவளுடைய கூடையில் இருந்து ஒரு கேரட்டை எடுத்துக் கடித்தபடியே விடுவிடுவெனத் தனியே நடந்து போக ஆரம்பித்தான்.

அவளுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. உதட்டைப் புடைவையால் அழுத்தித் துடைத்துவிட்டு, முகத்தையும் துடைத்துக்கொண்டாள். மனதில் இருந்த படபடப்பு அடங்கவே இல்லை. எதற்காக இப்படி நடந்துகொண்டான்? மார்க்கெட்டில் நடந்த கொலையும் இதுவும் ஒன்றுதான் இல்லையா? உலகில் எங்காவது ஒரு பெண் இப்படி நடந்திருக்கிறாளா? இந்த முத்தம் எதன் அடையாளம்? உன்னைப் போல எந்தப் பெண்ணையும் சந்தர்ப்பம் கிடைத்தால் என்னால் அடைய முடியும் என்பதை உறுதிசெய்துவிட்டுப் போகிறானா?

இது காமத்தில் விளைந்த முத்தம் இல்லை. அதிகாரத்தில், அகம்பாவத்தில், தான் ஓர் ஆண் என்ற திமிரில் விளைந்த முத்தம் இல்லையா? முத்தம்கூடவா இப்படி வன்முறைக் கருவியாகிவிட முடியும்?

உதட்டில் படிந்த அந்த முத்தக் கறையை எப்படி அழிப்பது? யோசிக்க யோசிக்க... அவளுக்குள் குமட்டிக்கொண்டுவந்தது. இது போன்ற ஒரு வன்முறையைப் பற்றி ஸ்ரீதரனிடம் சொன்னால், அவன் எளிதாக எடுத்துக்கொள்வானா? அவனுடைய அம்மாவுக்குத் தெரிந்தால், அவளை வீட்டைவிட்டுத் துரத்திவிட மாட்டாளா? அவளுடைய வீதியில் வசிப்பவர்கள், அவளுடைய சொந்த அக்கா, தம்பிகள் என்ன நினைப்பார்கள்? அவளுக்கு யோசிக்க யோசிக்க... அழுகை முட்டிக்கொண்டுவந்தது.

என்ன வாழ்க்கை இது? ஏன் இப்படிப் பாதுகாப்பே இல்லாத உலகில் வாழ்கிறோம்? எல்லாத் தருணங்களிலும் காம உணர்ச்சி ஆணின் அடிமனதில் பொங்கிக்கொண்டேதான் இருக்குமா? இந்த அற்பப் புத்தி எங்கிருந்து வருகிறது? இதைத்தான் அவனது பெற்றோர்கள் உருவாக்கினார்களா?

சந்து வழியாக நடந்து அவள் பிரதான சாலைக்கு வந்தாள். ஒருவழியாக மார்க்கெட்டைவிட்டு வெளியே வந்துவிட்டோம். இனி பயம் இல்லை. அவள் வேகமாக நடக்க ஆரம்பித்தாள். சாலைஎங்கும் போலீஸ்காரர்களாக இருந்தார்கள். வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தாள். கலவரம் காரணமாகச் சாலைகள் வெறிச்சோடிக்கிடந்தன. வீட்டை நெருங்கி வரவர... அந்தப் பையன். அவன் இயல்பாகப் பேசிய விதம், அவனது முத்தம் என்று ஒவ்வொன்றாக மேல் எழுந்து வர... மனதுக்குள் குமட்டிக்கொண்டு வந்தது.

வீட்டை நெருங்கும்போது சாவியை எங்கே வைத்தேன் என்று கூடையில் கைவிட்டுப் பார்த்தாள். கூடையினுள் உண்டியலை வைக்கும்போது சாவியை வெளியே எடுத்த ஞாபகம் வந்தது. ச்சே... எல்லாம் இந்த உண்டியல் சனியால் வந்தது. இதை ஏன் வாங்கினேன் என்று ஆத்திரமாக வந்தது. உண்டியலை எடுத்து ஆத்திரத்துடன்

அருகில் இருந்த வேலிப் புதரில் வீசினாள். அது உடைந்து நொறுங்கிய சத்தம் கேட்டது. சாவி இல்லாமல்போனதால் வீட்டுப் படிக்கட்டில் இருட்டுக்குள்ளாக உட்கார்ந்திருந்தாள். ஸ்ரீதரனிடம் உண்மையைச் சொன்னால் என்ன நடக்கும் என்பதைப் பற்றியே மனதில் நினைத்துக்கொண்டு இருந்தாள். நிஜத்தைச் சொன்னால் அதுதான் உண்மையான கலவரமாக இருக்கும். எதற்காக இதைச் சொல்ல வேண்டும்? சொன்னால் மட்டும் அந்த முத்தத்தை அழித்துவிட முடியுமா என்ன?

ஸ்ரீதரனின் பைக் சத்தம் கேட்டது. இருட்டில் இருந்து எழுந்து நின்றுகொண்டாள்.

''ஏன்டி... இருட்டுல உட்கார்ந்திருக்கே? வீட்டுச் சாவியைத் தொலைச்சிட்டியா?'' என்றான். பதில் சொல்லாமல் நின்றாள்.

''யாரோ ஒரு ஆளை மார்க்கெட்ல வெட்டிப் போட்டுட்டாங்க. ஒரே கலவரமாக்கிடக்கு... நீ கோட்டிக்காரி மாதிரி அங்கே போயி மாட்டிக்கிட்டியோனு நினைச்சிப் பயந்துபோயிட்டேன். உனக்கு ஒண்ணும் ஆகலையே!'' என்று கேட்டான்.

''நான் மார்க்கெட்டுக்குப் போகலை. தெக்கு பஜார் போயிட்டு வரும்போது சாவியைத் தொலைச்சிட்டேன்'' என்றாள்.

''உனக்கு தெக்கு பஜார்ல என்ன வேலை? வீட்ல தின்னுட்டுத் தின்னுட்டுக் கொழுத்துப் போயி ஊர் சுத்துறியா? வீட்டுச் சாவியைக்கூடப் பத்திரமா வெச்சிக்க முடியாம... என்னடி நினைப்பு? வெளியே போய் தனியா இருந்து பாரு... அப்போதான்டி உலகம் புரியும். நானே பலசரக்குல இருந்து துணிமணி, காய்கறி வரைக்கும் பாத்துப் பாத்து வாங்கிப் போடுறேன்ல... அதான் திமிரெடுத்து அலையுறே!'' என்றான்.

பதில் பேசாமல் கேவிக் கேவி அழ ஆரம்பித்தாள் துர்கா. இதற்குப் போய்... எதற்கு இப்படி அழுகிறாள்... என்று புரியாமல் அவளையே பார்த்துக்கொண்டு இருந்தான் ஸ்ரீதரன்.

அந்த இளைஞன் துர்காவை மறுபடியும் கடந்து சென்றான். காய்கறி மார்க்கெட்டுக்கு வந்த அரை மணி நேரத்துக்குள் அவனை மூன்று முறை பார்த்து விட்டாள். அந்தப் பையனுக்கு 20 வயது இருக்கக்கூடும். வெளிறிய ஜீன்ஸும் டி-ஷர்ட்டும் அணிந்து இருந்தான். இடது கையில் ஒரு பித்தளைக் காப்பு.

இவனைப் போன்ற பையன்கள் புதிதாகத் திறக்கப்பட்டுள்ள ஹாம்சன் பொறியியல் கல்லூரியில் படிப்பதற்காக வீடு எடுத்துத் தங்கி இருப்பவர்கள். அவளது வீட்டுக்குப் போகிற வழியில் உள்ள பிள்ளையார் கோயிலை ஒட்டிய வீட்டில்கூட கல்லூரி மாணவர்கள் தான் தங்கியிருக்கிறார்கள். கொடிகளில் நிறையத் துணிகள் காய்வதைக் கண்டிருக்கிறாள்.

இந்தப் பையனும் அப்படி எங்காவது தங்கியிருக்கக்கூடும். இவனைப்போன்ற இளைஞர்கள் வீட்டைவிட்டு வந்த பிறகு சமைக்கக் கற்றுக்கொள்வதில் காட்டும் ஆர்வத்தை வீட்டில் இருக்கும்போது ஒருநாள்கூட ஏன் காட்டுவதே இல்லை? பெண்கள் எந்த ஊரில், எந்த வேலைக்காகப் போனாலும் தாங்களாகவே சமைத்துத்தான் சாப்பிட்டுக்கொள்ள வேண்டும். அல்லது வுமன்ஸ் ஹாஸ்டலில் போடும் சாப்பாட்டினைச் சாப்பிட வேண்டும். மெஸ்ஸில் கணக்கு வைத்துக்கொண்டோ, இரவு நேர பரோட்டாக் கடைகளைத் தேடிப் போய் சாப்பிடும் பெண்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள். வேலை ஒன்று, சம்பாத்தியம் ஒன்றாக இருந்தாலும் இரண்டுவிதமான வாழ்க்கை முறைதானே இருக்கிறது.

அந்தப் பையன் காய்கறி மார்க்கெட்டில் எந்தப் பொருளையும் பேரம் பேசி வாங்குவது இல்லை என்பது கண்கூடாகத் தெரிந்தது. அவன் கையில் ஒரு ஜவுளிக் கடை பை வைத்திருந்தான். காய்கறிகள் வாங்குவதில் அனுபவம் இல்லை என்பது அவன் வாங்கிவைத்திருக்கிற முற்றிய முருங்கைக் காயிலேயே தெரிந்தது. துர்கா காய்கறிகளை வாங்கி முடித்திருந்தாள். இருட்டுவதற்குள் வீட்டுக்குப் போய்விட வேண்டும். வீட்டுச் சாவி அவளிடம் இருந்தது. அலுவலகம்விட்டு ஸ்ரீதரன் வந்து காத்திருந்தால் கத்துவான். புதினா கிடைத்தால் இரவுக்குத் துவையல் அரைக்கலாம் என்று தேடி நடந்தபோது மண்பாண்டக் கடையில் தற்செயலாக அந்த

உண்டியலைப் பார்த்தாள். அந்த உண்டியல் மீன் வடிவத்தில் இருந்தது. வெளிர் நீல வண்ணம் அடித்திருந்தார்கள். கண்களும் செவுளும்கூடத் துல்லியம். மீனின் வயிற்றுக்குள் காசு போட்டுவைப்பது என்பது வேடிக்கையானது இல்லையா? துர்கா அந்த உண்டியலைக் கையில் எடுத்துப் பார்த்துத் தனக்குத்தானே சிரித்துக்கொண்டாள்.

சிறு வயதில் ஒரு நாள் கோதையாச்சி சொன்ன கதையில் ஒரு மீன் வயிற்றில் 20 தங்கக் காசுகள் இருந்து, அதை ஒரு மீனவன் எடுத்துப் பணக்காரன் ஆன கதை நினைவில் வந்துபோனது. அவள் சிறுமியாக இருந்த நாட்களில் இதுபோன்ற உண்டியல்கள் எதையும் பார்த்தது இல்லை. அப்போது எல்லாம் செம்மண் நிறத்தில் உள்ள மண் உண்டியல்கள்தான் விற்பனையாகின. இப்போதுதான் எத்தனை விதமான உண்டியல்கள்.

சிறு வயதில் காசு சேர்த்துவைத்து தேர்த் திருவிழாவின்போது விதவிதமான பாசி வளையல், ரிப்பன் எல்லாம் வாங்க வேண்டும் என்று துர்கா ஆசைப்பட்டு இருக்கிறாள். எப்போதாவது காரைக்குளத்தில் இருந்து வரும் கதிரேசன் சித்தப்பா மட்டும் ஊருக்குப் போகும்போது அவளுக்கெனத் தனியே பத்தோ இருபதோ ரூபாய்களைத் தந்துவிட்டுப் போவார். மற்றபடி வீட்டுக்கு வரும் விருந்தாளிகளில் அவளுக்குக் காசு தந்தவர்கள் வெகு குறைவு. கூச்சப்பட்டுக்கொண்டு அவள் கேட்கவும் மாட்டாள்.

அவளது தம்பி சிவப்பிரகாசம் அப்படிக் கூச்சப்பட மாட்டான். காசைக் கேட்டு வாங்கிக்கொள்வான். எவ்வளவு ரூபாய் கிடைத்தாலும் சினிமா பார்ப்பது, ஹோட்டலில் போய் பூரி சாப்பிடுவது, பஜ்ஜி வாங்கித் தின்பது என்று இரண்டு நாட்களுக்குள் செலவழித்துவிடுவான். அம்மா அவனை ஓட்டைக் கை என்று திட்டுவாள். அவர்கள் வீட்டில் காசு சேர்ப்பதில் கெட்டியாக இருந்தவள் தமயந்தி மட்டுமே. அவள் துர்காவைவிட மூன்று வயது மூத்தவள். அந்த கெட்டிக்காரத்தனம்தான் இப்போது அவளை அமெரிக்காவில் வாழவைத்திருக்கிறது. சிறு வயதில் கெட்டிக்காரத்தனமாக உள்ள பலர் பெரியவர்களானதும் தோற்றுப்போய்விடுகிறார்கள். சிலருக்குத்தான் அந்தக் கெட்டித்தனம் வாழ்நாள் பூராவும் அமைந்துவிடுகிறது.

துர்கா உண்டியலின் விலையைக் கேட்டாள். மண்பானைகள் விற்பனை செய்யும் அந்தப் பெரியவர் உண்டியலைக் கையில் வாங்கிப் பார்த்துவிட்டு முப்பது ரூவா குடும்மா என்றார். விலை அதிகம் என்று யோசித்தபடியே பார்த்தாள். ''உண்டியலை வாங்கிக் குடும்மா... உன் மக சந்தோஷப்படுவா'' என்று கடைக்காரர் சொன்னதும் அவளது முகம் மாறியது. திருமணமாகி பதினோரு வருஷங்கள் கடந்த பிறகும் அவளுக்குக் குழந்தை இல்லை. அந்த வலி ஒவ்வொரு விளையாட்டுப் பொருளைப் பார்க்கும்போதும் தெறிக்கவே செய்கிறது. இதற்காகவே டி.வி-யில் குழந்தைகள் தொடர்பான விளம்பரங்கள் வருவதைக்கூடப் பார்க்க மாட்டாள். ஸ்ரீதரன் குழந்தையின்மை பற்றிப் பேசுவதைக்கூட விரும்புவது இல்லை. ஒன்றிரண்டு வருஷங்கள் இருவரும் மாறிமாறி சிகிச்சை எடுத்துக்கொண்டார்கள். ஆனாலும் கர்ப்பம் தரிக்கவே இல்லை. முடிவில் ஒரு நாள் ஸ்ரீதரன் சொன்னான்... 'துர்கா, பிள்ளை பிறக்கிறப்போ பிறக்கட்டும்... ஒருவேளை பிறக்காமலே போயிட்டா, நமக்குக் கொடுத்துவெச்சது அவ்வளவுதான்னு நினைச்சிக்கிடுவோம். இப்படி ஒவ்வொரு டாக்டர்கிட்டயாப் போயி மருந்து மாத்திரை சாப்பிட்டு மாசக்கணக்கில் காத்துக்கிட்டு இருந்து ஏமாந்துபோறது மனசுக்குக் கஷ்டமா இருக்கு. இதுல உன் தப்பு, என் தப்புனு எதுவும் இல்லை. நமக்குக் கொடுப்பினை இல்லே, அவ்வளவுதான்!'

அதைக் கேட்டு துர்கா அழுதாள். ஸ்ரீதரன் அவளைத் தேற்ற முயற்சிக்கவே இல்லை. நீண்ட அழுகைக்குப் பிறகு அவன் சொன்னதுதான் சரி என்று அவளும் ஏற்றுக்கொண்டுவிட்டாள். எப்போதாவது பின்னிரவில் உறக்கம் பிடிக்காமல் இந்த நினைவு மேலோங்கத் துவங்கிவிடும். அப்போது என்ன செய்வது என்று தெரியாமல் முகத்தைப் புதைத்துக்கொண்டு சத்தம் இல்லாமல் அழுவாள். ஸ்ரீதரனும் அப்படித்தான் இருக்கக்கூடும். ஆனால், அவளிடம் அதைக் காட்டிக்கொண்டது இல்லை.

மண்பானை விற்பவருக்கு அவளது சொந்த வலி தெரியுமா என்ன? அவள் அந்தக் கிழவரையே பார்த்துக்கொண்டு இருந்தாள். அவளது நினைப்பு சட்டெனத் தாவி மாறியது. பெண் பிள்ளைகள் மட்டும்தான் உண்டியல் வாங்க வேண்டுமா என்ன? பையன்கள் செலவழிக்கப் பிறந்தவர்கள், பெண்கள் சேமிக்கப் பிறந்தவர்கள் என்று யார் சொன்னது? இந்த உண்டியலே வேண்டாம் என்று சொல்லிவிடலாமா என்று நினைத்தாள். அவளது முகச்சுழிப்பை அறிந்துகொண்டவரைப் போல, 'இருபத்தைந்து ரூபாய் குடும்மா போதும்' என்று உண்டியலை அவள் முன்பாக நீட்டினார். 'வேணாம் இருக்கட்டும்' என மறுத்தபடி அவள் தனது காய்கறிக் கூடையைத் தூக்கிக்கொண்டு கடையைவிட்டு விலகி நடப்பதுபோல நகர்ந்தாள்.

கடைக்காரக் கிழவர் தனது இருக்கையைவிட்டு எழுந்து நின்று, 'ஏம்மா வேணாம்கிறே, பதினஞ்சு ரூபாய்க்குத் தர்றேன், வாங்கிக்கோ' என்றார். அவள் வாங்க வேண்டாம் என்ற நினைப்பில், ''பத்து ரூபாய்க்குத் தருவீங்களா?'' என்று கேட்டாள். அவர் நிமிஷ நேரத் தயக்கத்துக்குப் பிறகு, 'சரி குடு' என்று உண்டியலை ஒரு காகிதத்தில் மடிக்கத் துவங்கினார்.

இதில் காசு சேர்த்துவைத்து என்ன செய்வது? மாசச் சம்பளம் மொத்தமாக அவளிடம்தானே இருக்கிறது. ஆனாலும் சேமிக்கிற காசுக்குத் தனி மதிப்பு இருக்கவே செய்கிறது. பத்ரிநாத்துக்கு ஒரு முறையாவது போய்வர வேண்டும். அவ்வளவு பனியை நேரில் பார்த்ததே கிடையாது. அதிகபட்சம் அவள் அறிந்த ஜில்லிடல் வீட்டு பிரிஜ்ஜில் உறைந்துபோயிருக்கிற பனிக் கட்டியைச் சுத்தம் செய்ய முயன்று கையை வைத்ததுதான்.

பத்ரிநாத்தில்தான் எவ்வளவு பனி! மலைக்குப் போர்வை போர்த்திவிட்டதுபோல. அங்கே போய் வர எவ்வளவு செலவாகும்? இந்த உண்டியல் மொத்தமாக நிரம்பினாலும் ஆயிரம் ரூபாய்கூடத் தேறாதுதானே? பின் எதற்கு இந்த உண்டியல்? ஆனால், உண்டியலைக் கையில் எடுத்த அந்த நிமிஷம் தான் ஒரு சிறுமிபோல ஆனது சந்தோஷமாகத்தான் இருந்தது. அதற்கு விலைதான் அந்தப் பத்து ரூபாய் என்று எடுத்துக்கொள்ள வேண்டியதுதான்.

கிழவர் உண்டியலை அழகாகக் காகிதத்தால் சுற்றினார். தெரு நாய் ஒன்று சாப்பிட எதுவும் கிடைக்காமல் வாலை ஆட்டியபடியே அவள் காலடியில் இருந்த காய்கறிப் பையை நெருங்கி வந்தது. அவள் கையைக் காற்றில் சூவென வீசி நாயை விரட்டிவிட்டு, பர்ஸைத் திறந்து காசை வெளியே எடுத்துக் கிழவரிடம் கொடுத்தாள். உண்டியலைப் பத்திரமாகக் காய்கறிக் கூடைக்குள் வைப்பது எளிதானதாக இல்லை. இதற்காக அவள் வாங்கியிருந்த புடலங்காய்களையும் தேங்காயையும் வெளியே எடுத்துவைத்தாள்.

அப்போது மார்க்கெட்டின் மேற்கு வாசலில் இருந்து ஒருவன் தலைதெறிக்க ஓடி வருவது தெரிந்தது. அவன் ஓங்காரமான குரலில் அலறியபடியே ஓடிவந்தான். அவனைத் துரத்திக்கொண்டு நாலைந்து பேர் ஓடி வந்தார்கள். கிழவர் கடையைவிட்டு எக்கி வெளியே பார்த்துவிட்டு பீதியான முகத்துடன், 'ஓரமாப் போய் நில்லும்மா' என்று சொல்வதற்குள் ஓடிவந்தவன் வாழை மட்டை சறுக்கி, வெங்காயக் கூடையின் முன்பாக விழுந்தான். துரத்தி வந்தவர்கள் விழுந்துகிடந்த மனிதனைச் சுற்றி வளைத்துக்கொண்டார்கள்.

துர்கா தன் வாழ்வில் முதன்முறையாக ஒரு மனிதனை ஐந்து பேர் சேர்ந்து அரிவாளால் வெட்டுவதை அப்போதுதான் பார்த்தாள். என்ன கோரம் இது? விழுந்துகிடந்தவன் எழுந்து கொள்வதற்காக திமிறித் தவித்தான். அவனது குரல்வளையில் ஒருவன் காலை வைத்து அழுத்த, மற்றவர்கள் அவனது கழுத்தில், அடிவயிற்றில் இடுப்பில் என அரிவாளால் மாறி மாறி வெட்டினர்.

மரண ஓலமும் ரத்தம் ஒழுகத் துடிக்கும் உடலுமாக அந்த மனிதனை அப்படியே போட்டு விட்டு வெட்டியவர்கள் வெளியேறிப் போனார்கள். துர்காவுக்குப் படபடப்பாக வந்தது. தான் ஒரு கொலையைப் பார்த்திருக்கிறோம். ஒரு மனிதன் துடிதுடித்துச் சாவதைக் கண் முன்னே பார்த்திருக்கிறோம். என்ன அவலம் இது? எதற்காகக் கொன்றார்கள்?

துர்காவின் தொண்டையை யாரோ இறுக்கிப் பிடித்து மூச்சு முட்டச்செய்ததுபோல் இருந்தது. அவள் கைகள் நடுங்கத் துவங்கின. அடிவயிற்றினைக் கைகொண்டு பிசைவதுபோல இருந்தது. அங்கிருந்து ஓடிவிட வேண்டும் என மனது பதைபதைக்கத் துவங்கியது.

கடையில் இருந்த கிழவரைக் கூடக் காணவில்லை. அருகில் இருந்த தேங்காய்க் கடை, இலைக் கடை, இஞ்சி பூண்டு விற்கும் கடை ஒன்றில்கூட ஆட்களைக் காணோம். அவள் ஏன்தான் இன்னமும் அங்கேயே நிற்கிறோம் என்ற குழப்பத்துடன் தன் காலடியில் விழுந்துகிடந்த புடலங்காயைப் பார்த்தாள். அதைக் குனிந்து எடுத்துப் பையில் வைப்பதற்குக்கூட அவளிடம் தைரியம் இல்லை. ஓரக்கண்ணால் செத்துக்கிடந்தவனைப் பார்த்தாள். அந்த மனிதனுக்கு 30 வயது இருக்கக்கூடும். கறுப்பு நிற பேன்ட்டும் ஊதா நிறக் கோடுகள் போட்ட முழுக்கைச் சட்டையும் அணிந்திருந்தான். கால்கள் திருகி, முகம் ஒரு பக்கம் புதைந்துகிடந்தது.

யார் அவன், எதற்காக அவனைக் கொன்றார்கள். அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை. எப்படியாவது பாதுகாப்பாக வீட்டுக்குப் போய்விட வேண்டும் என்ற பயம் அவளுக்குள் நிரம்பத் துவங்கியது. ஒவ்வொரு நாளும் காலையில் ஸ்ரீதரன் அலுவலகத்துக்குக் கிளம்பிப் போன பிறகு, துர்கா காய்கறி வாங்க வருவாள்.

அப்படி வாங்கி முடித்த பிறகு, தெற்கு வாசல் வழியாக வெளியேறி நடந்து மீரான் பழரசக் கடையில் போய் ரோஸ் மில்க் குடித்துவிட்டு, வெயிலேற நடந்து காந்தி நகரில் உள்ள தனது வீட்டுக்குப் போய்ச் சேருவாள். அதற்கு எப்படியும் 20 நிமிடங்கள் ஆகும்.

இன்றைக்கு ஏன் மாலை நேரம் மார்க்கெட்டுக்கு வந்தோம் என்று தன் மீதே ஆத்திரமாக வந்தது. அவள் பதற்றத்துடன் தனது காய்கறிக் கூடையை எடுத்துக்கொண்டு நடக்க ஆரம்பித்தாள். அப்போது சங்கரன்செட்டியார் சந்துக்குள் இருந்து நாற்பது ஐம்பது பேர் கையில் அருவாள் கட்டைகளுடன் மார்க்கெட்டினைச் சூறையாடிய படியே வருவது தெரிந்தது. வந்தவர்கள் 'ஓடு… ஓடு…' என எதிர்ப்பட்டவர்களை வாழைத்தண்டால் அடித்து விரட்டினார்கள்.

அவளும் ஓடத் துவங்கினாள். அவளால் ஓட முடியவில்லை. உடல் ஏன் இப்படிக் கனத்துப்போயிருக்கிறது. கால்களை எடுத்துவைக்க முடியாமல் மூச்சு வாங்கத் துவங்கியது. காய்கறிக் கூடை வேறு ஒரு பக்கம் இழுத்தது. கேரட்டும் பீட்ரூட்டும் பூசணிக்காயும் விசித்திரமான பொருள்களைப் போலத் தோன்றின. பையை அப்படியே போட்டுவிட்டு ஓடிவிடலாமா என்று கூட யோசித்தாள். ஆனால், அப்படி விட மனசு வரவில்லை. மிகுந்த பிரயாசையுடன் அவள் கண்களை மூடிக்கொண்டு வடக்கு நோக்கி ஓடினாள்.

கண்களைத் திறந்து பார்த்தபோது வெல்லக் கிட்டங்கி அருகே வந்திருப்பது தெரிந்தது. 200 அடிகூட இருக்காது. இவ்வளவுதான் தன்னால் ஓட முடிந்திருக்கிறதா? வடக்கு வாசலுக்குப் போக இன்னும் நிறைய ஓட வேண்டுமே. ஏன் உடம்பு ஒத்துழைக்க மறுக்கிறது? அவள் பையை இழுத்துக்கொண்டு வேகமாக நடக்க ஆரம்பித்தாள்.

ஜீன்ஸ் அணிந்த பையன் தற்செயலாகக் கண்ணில்பட்டான். அவன் இன்னொரு பக்கம் போய்க்கொண்டு இருப்பது தெரிந்தது. அவனை அழைக்கலாமா என்று யோசிப்பதற்குள் அந்தப் பையன் மறுபக்கம் போய்விட்டு இருந்தான். துர்கா ஓட முடியாமல் ஓடிக்கொண்டு இருந்தாள். யாரோ பின்னால் துரத்திவந்து அவளை அமுக்கிப் பிடித்து விடப்போவதுபோல் உணர்ந்தாள். குதிகால் வலிக்க ஆரம்பித்தது. கெண்டைச் சதைகள் இறுகக் கவ்விக்கொண்டதைப் போலாகின.

துர்கா பத்தாம் வகுப்பு வரை பள்ளி மைதானத்தில் ஓடியிருக்கிறாள். அதன் பிறகு, எம்.எஸ்சி. படிக்கும் வரை ஓடியதாக ஞாபகமே இல்லை. ஒரே ஒரு முறை மதுரையில் ராமேஸ்வரம் ரயிலைப் பிடிப்பதற்காக பிளாட்ஃபாரத்தில் ஓடியிருக்கிறாள். அதுவே மார் அடைப்பதுபோல வந்து ரயிலில் அன்றிரவு சாப்பிடக்கூட முடியாமல் போனது.

அவளுக்குப் பள்ளி வயதில் கூடைப் பந்து விளையாடுவது பிடிக்கும். தடகளப் போட்டியில் வேகமாக ஓடவும் செய்வாள். திருமணத்தோடு எல்லாமும் கைவிட்டுப் போய்விட்டது. இன்றைக்குத்தான் அவள் உடல் எடை எவ்வளவு பெரிய பாரம் என்பதை அவள் முழுமையாக உணர்ந்தாள். இத்தனை வருடங்கள் அந்த மார்க்கெட்டுக்கு வந்து போனபோதும் கிட்டங்கி பக்கம் எல்லாம் அவள் வந்ததே கிடையாது. ஒரே புகையிலை நாற்றமாக இருந்தது. அது சுருட்டுப் புகையிலை மற்றும் பீடி கம்பெனிகளின் கடைகள் உள்ள பகுதி. அந்தப் பக்கம் கடந்தாலே, புகையிலை வாடை மூச்சைத் திணறச்செய்யும். ஆனால், இன்றைக்கு அதற்குள்ளாகத்தான் நடந்தாள்.

இதற்கு மேல் வேகமாக நடக்க முடியாது என்பதுபோல அவளது கால்கள் நடுங்கின. அவள் பெருமூச்சிட்டபடியே நின்று திரும்பிப் பார்த்தாள். அவள் வயதையத்த ஒரு பெண் தனது இரண்டு பிள்ளைகளை இழுத்துக்கொண்டு ஓடினாள். அந்தப் பிள்ளைகள் தாயைவிட வேகமாக முன்னால் ஓடினார்கள். ''ஜெயா… ஓடாதே நில்லு. கேசவ் சொன்னாக் கேளுடா… அம்மா வர்றேன்'' என்று அந்தப் பெண் கத்திய படியே அவர்கள் பின்னால் ஓடினாள். அந்தப் பெண்ணாலும் ஓட முடியவில்லை. பிள்ளைகளை அழைக்கும் அவளுடைய குரல் உடைந்து சிதறுவதுபோல் இருந்தது. அவள் தன் நெஞ்சைப் பிடித்தபடியே போய்க்கொண்டு இருந்தாள்.

வடக்கே இருந்து அரிசிப் பொரி விற்கும் ஓர் ஆள் தனது சைக்கிளைத் தள்ளியபடியே வேகமாக வந்தான். அவன் பயத்தோடு ஓடிய ஆட்களைப் பார்த்துச் சொன்னான், ''வாழை மண்டியில பெட்ரோலை ஊத்திப் பத்தவெச்சிருக்காங்க. அந்தப் பக்கம் போக முடியாது. தீ கொழுந்துவிட்டு எரியுது. ராமசாமி தியேட்டர்

பின்னாடி உள்ள சந்து ஒண்ணுதான் வெளியே போற வழி. படுபாவிப் பயக மார்க்கெட்ல வெச்சு எல்லாரையும் உயிரோடுகொல்லப் போறாங்க. எனக்குக் கண்ணைக் கட்டிக்கிட்டு வருது. எதுக்குத்தான் இப்படி சாதி வெறி பிடிச்சு அடிச்சிக்கிடுறாங்களோ..?''

வாழை மண்டியில் பற்றிய தீயின் காரணமாகக் காற்றெங்கும் புகை குபுகுபு எனப் பரவத் துவங்கியது. கண்ணில் புகைபட்டு எரிச்சல் உண்டாகியது. நெருப்பு பற்றிக்கொண்டுவிட்டால் எளிதாகக் கூரை வேய்ந்த கடைகள் யாவும் தீப்பற்றிக்கொண்டுவிடும். அந்தப் பொரி விற்பவன் சொன்னதுபோல கூட்டத்தோடு சிக்கி சாகப்போகிறோமா? ஏன் இப்படி மார்க்கெட்டில் மாட்டிக்கொண்டு யார் கையாலோ சாகப்போகிறோம்? நினைக்கவே அவளுக்கு அழுகையாகவும் பயமாகவும் வந்தது.

ஆட்கள் அங்கும் இங்கும் ஓடினர். எந்தப் பக்கம் போவது என்று புரியாமல் அவளும் கூட்டத்தோடு நெரிசலில் சிக்கினாள். ஒரு ஆள் மண்டை உடைந்து கன்னத்தில் ரத்தம் வழிய சேமியா பாக்கெட் விற்கும் கடையின் முன்பாக உட்கார்ந்து அழுதுகொண்டு இருந்தான். அந்தப் பக்கம் போகாமல் விலகி இடதுபுறம் ஒதுங்கி நடக்க ஆரம்பித்தாள். சாக்கடை உடைந்து ஓடியது. வழி எங்கும் ஒரே அழுகல் தக்காளிகளும் முட்டைக்கோஸ் இலைகளுமாக இருந்தன. அதற்குள் எப்படிக் கால்வைத்து நடப்பது என்றே தெரியவில்லை.

யாரோ சிலர் ஆவேசத்துடன் எதிர்ப் பக்கம் இருந்து ஓடி வந்தனர். நடக்க நடக்க அடைத்துச் சாத்தப்பட்டகடைகளாகத் தெரிந்தன. வெளியேறும் வழியே காணோம். தொலைவில் ஒரு பெண் அலறும் ஓசை கேட்டது. என்ன செய்கிறார்கள் அந்தப் பெண்ணை? எங்கே அது நடக்கிறது? அந்தப் பெண்ணின் அலறல் சத்தத்தைத் தொடர்ந்து, 'அய்யய்யோ... அய்யய்யோ...' என்ற கூக்குரல் எழுந்து அடங்கியது.

எந்தப் பக்கம் இருந்து யார் வருகிறார்கள், யாரை அடித்துக் கொல்கிறார்கள் என்று தெரியவில்லை. ஆனால், எலிப் பொறிக்குள் சிக்கிய எலி ஓடுவதுபோலக் குழப்பத்துடன் ஆட்கள் அங்கும் இங்கும் ஓடினர். துர்கா எந்த வழியாகப் போவது என்று புரியாமல் மூடிக்கிடந்த சர்பத் கடையின் மரத்தூணைப் பிடித்துக்கொண்டு சாய்ந்து அழுதாள். அவள் நின்றிருந்த இடத்தில் இருந்து சில அடிகள் தொலைவில் லுங்கி கட்டிய ஆளைப் பத்துப் பேர் சேர்ந்து அடித்துக்கொண்டு இருந்தார்கள். அவர்களைக் கடந்துபோனால் மட்டுமே பிரதான சாலைக்குப் போக முடியும். ஆனால், அதை எப்படிக் கடந்து போவது? இத்தனை பேர் சேர்ந்து ஒரு ஆளை உருட்டுக்கட்டையால் தாக்குகிறார்களே என்று துர்காவுக்கு நடுக்கமாக இருந்தது.

துர்கா அப்போதுதான் கவனித்தாள். மூடிக்கிடந்த புகையிலைக் கடை ஒன்றின் சாக்குப் படுதாவுக்குள் அந்த ஜீன்ஸ் அணிந்த பையன் ஒடுங்கி நின்றிருந்தான். அவனும் தன்னைப் போலவே பயந்துபோனவனாக ஒளிந்து இருக்கிறான்போலும். கும்பல் வெளியேறும் வரை ஒதுங்கியிருப்பது நல்லதுதானே என்று தோன்றியது. அவள் மெதுவாகப் படுதாவை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

சாக்குப் படுதாவில் இருந்த சிறிய துவாரத்தின் வழியே அந்தப் பையன் அவள் வருவதைக் கண்டிருக்க வேண்டும். தனது கைகளை நீட்டி அவளை மறைவுக்குள் இழுத்துக்கொண்டான். ஆள் உயரப் படுதாவுக்குள் அவள் வந்து நின்றபோது அதற்குள் மறைந்துகொண்டுவிட்டால் வெளியே யாருக்கும் சுத்தமாகத் தெரியாது என்பது புரிந்தது. அந்தப் பையன் இறுக்கமான முகத்துடன் நல்லா உள்ளே வந்து நில்லுங்க என்றான். அவன் கைகளில் காய்கறிப்பை இல்லை. ஒருவேளை வீசி எறிந்திருக்கக் கூடும். அவன் தணிவான குரலில் சொன்னான், ''அந்த சந்து வழியா போனா வெளியே போற வழி இருக்கு. அந்த ஆட்கள் போனதும் வெளியே போயிரலாம்.'' அவள் தலையாட்டிக்கொண்டாள். அவள் கணவனைத் தவிர வேறு எந்த ஆணோடும் இவ்வளவு நெருக்கமாக ஒட்டிக்கொண்டு நின்றது இல்லை. அவனது கைகள் தற்செயலாக உரசுவதுபோல உரசிக்கொள்கின்றன. அவனது உடல் மணம், வியர்வை வாடை, மூச்சுக் காற்று, ச்சே... என்ன நினைப்பு அது. இந்தக் கும்பல் கலைந்துபோவதற்கு எவ்வளவு நேரமாகும்?

திருமண நாள் அன்று அவள் கணவனோடு புகைப்படம் எடுப்பதற்கு இவ்வளவு நெருக்கமாக நின்றிருக்கிறாள். அதன் பிறகு இன்றைக்குத்தான் வேறு ஓர் ஆணோடு நின்றிருந்தாள். காய்கறிப் பையைக் கீழே வெச்சிக்கோங்க என அவனாகப் பிடுங்கிக் கீழேவைத்தான். அவன் பக்கம் திரும்பிப் பார்க்கவே வேண்டாம் என்பதுபோல அவள் வேறு பக்கம் பார்த்துக்கொண்டே இருந்தாள். அவன் எதையோ யோசிப்பவனைப் போல நகத்தைக் கடித்துக்கொண்டே இருந்தான்.

எப்படியாவது வீடு போய்ச் சேர்ந்துவிட்டால் போதும் என்றிருந்தது. அந்தப் பையன் பொறுமை அற்றவனைப் போல அடிக்கடி சாக்குப் படுதாவைத் தூக்கி வெளியே ஆட்கள் போய்விட்டார்களா என்று பார்த்துக்கொண்டே இருந்தான். அவனோடு அப்படி ஒன்றாக நிற்பது அவளுக்கு என்னவோ செய்தது. அதை அவனும் உணர்ந்தானா என்பது தெரியவில்லை. வெளியே மாலை அடங்கி இரவு எழுந்தது. சாலையோர விளக்குகளின் வெளிச்சம் அவர்கள் நின்றிருந்த இடத்தின் அருகே நீரைப்போல ஓடியது. துளித் துளியாகச் சொட்டிக் கடந்துபோவதுபோல நிமிஷங்கள் கரைந்து கொண்டு இருந்தன. அவன் எதையோ நினைத்துப் பெருமூச்சிட்டபடியே தலையைக் குலுக்கிக்கொண்டான். துர்கா அவனைக் கவனிக்காதவள்போலவே நின்று இருந்தாள். அவன் எதையோ பேச விரும்பியவனைப் போல தொண்டையைச் செருமிக்கொண்டான்.

அவனோடு என்ன பேசுவது என்று அவளுக்குப் புரியாமல் அமைதியாக இருந்தாள். அவளது பையில் இருந்த உண்டியலைக் கவனித்தவனைப் போலக் கேட்டான்...

"இந்த உண்டியலை யாருக்காக வாங்கிட்டுப் போறீங்க?"

"எனக்குத்தான்."

"இந்த வயசுல உண்டியல்ல சேர்த்துவெச்சு என்ன வாங்கப்போறீங்க?"

"சும்மா சேக்கணும்னு தோணுது... அதான்!"

"உண்டியலை உடைக்கிற நாள்ல அழுவீங்களா?"

"இல்லே... எதுக்குக் கேட்குறீங்க?"

"நான் அழுதிருக்கேன். எங்கப்பா எனக்குத் தெரியாம என் உண்டியலை எடுத்து உடைச்சி காசை எடுத்துட்டுப் போயிடுவார். அதுல இருந்து நான் உண்டியலே சேக்குறது இல்ல!"

ஒரு பள்ளிச் சிறுவனைப்போல அவன் பேசியது அவளுக்குப் பிடித்திருந்தது. இவனோடு பேசுவதில் தப்பொன்றும் இல்லை என்று இணக்கமாக உணர்ந்தாள்.

"ஹாம்சன்ல படிக்கிறீங்களா?" என்று கேட்டாள்.

"ஃபர்ஸ்ட் இயர். நீங்க என்ன படிக்கிறீங்க..." என்றான் அவன்.

வேண்டும் என்றே கேட்கிறான் என்பது புரிந்தது. "ஹவுஸ் ஒய்ஃப்" என்றாள். அவன் தலையசைத்துவிட்டுத் தனக்குத்தானே சிரித்துக்கொண்டான். எதற்குச் சிரிக்கிறான்? ஹவுஸ் ஒய்ஃப் என்பதில் சிரிப்பதற்கு என்ன இருக்கிறது? அவன் ஏதோ யோசனை செய்தவனைப் போல அமைதியாகிவிட்டான். அவளுக்கு அந்தப் படுதாவின் பின்னால் நிற்பது மூச்சுமுட்டுவதுபோல் இருந்தது. கைகளால் முகத்தின் முன்னால் வீசிக்கொண்டாள்.

அந்தப் பையன் அதன் பிறகு அவளிடம் எதுவும் பேசவில்லை. நீண்ட காத்திருப்பின் பிறகு, சாக்குப் படுதாவை விலக்கி வெளியே பார்த்தான். தொலைவில் யாருமே இல்லை. அந்தக் கும்பல் போயிருந்தது. அவள் குனிந்து தனது காய்கறிப் பையை எடுத்துக்கொண்டாள். அவனுக்கு நன்றி சொல்ல வேண்டும்போல் இருந்தது. மெல்லிய புன்னகையோடு திரும்பி அவனை ஏறிட்டுப் பார்த்த போது, அவன் ஒரு நிமிடம்கூட யோசிக்காமல் அவள் தோளைப் பிடித்து இழுத்து, அவள் முகத்தைத் தன் முகத்தோடு பொருத்தி உதட்டோடு அழுத்தி முத்தமிட்டான்.

அவள் விலக்க முயன்றாள். ஆனால், அவன் விடவில்லை. ஐஸ் கட்டியைப் பல்லால் கடித்துத் தின்றதுபோன்ற சிலிர்ப்பூட்டும் முத்தம். அதிர்ச்சியில் இருந்து மீள முடியாமல் நின்ற அவளைவிட்டு விலகி, படுதாவுக்கு வெளியே நின்று சோம்பல் முறித்தவனைப் போலச் சிரித்தான். பிறகு, அவளுடைய கூடையில் இருந்து ஒரு கேரட்டை எடுத்துக் கடித்தபடியே விடுவிடுவெனத் தனியே நடந்து போக ஆரம்பித்தான்.

அவளுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. உதட்டைப் புடைவையால் அழுத்தித் துடைத்துவிட்டு, முகத்தையும் துடைத்துக்கொண்டாள். மனதில் இருந்த படபடப்பு அடங்கவே இல்லை. எதற்காக இப்படி நடந்துகொண்டான்? மார்க்கெட்டில் நடந்த கொலையும் இதுவும் ஒன்றுதான் இல்லையா? உலகில் எங்காவது

ஒரு பெண் இப்படி நடந்திருக்கிறாளா? இந்த முத்தம் எதன் அடையாளம்? உன்னைப் போல எந்தப் பெண்ணையும் சந்தர்ப்பம் கிடைத்தால் என்னால் அடைய முடியும் என்பதை உறுதிசெய்துவிட்டுப் போகிறானா?

இது காமத்தில் விளைந்த முத்தம் இல்லை. அதிகாரத்தில், அகம்பாவத்தில், தான் ஓர் ஆண் என்ற திமிரில் விளைந்த முத்தம் இல்லையா? முத்தம்கூடவா இப்படி வன்முறைக் கருவியாகிவிட முடியும்?

உதட்டில் படிந்த அந்த முத்தக் கறையை எப்படி அழிப்பது? யோசிக்க யோசிக்க... அவளுக்குள் குமட்டிக்கொண்டுவந்தது. இது போன்ற ஒரு வன்முறையைப் பற்றி ஸ்ரீதரனிடம் சொன்னால், அவன் எளிதாக எடுத்துக்கொள்வானா? அவனுடைய அம்மாவுக்குத் தெரிந்தால், அவளை வீட்டைவிட்டுத் துரத்திவிட மாட்டாளா? அவளுடைய வீதியில் வசிப்பவர்கள், அவளுடைய சொந்த அக்கா, தம்பிகள் என்ன நினைப்பார்கள்? அவளுக்கு யோசிக்க யோசிக்க... அழுகை முட்டிக்கொண்டுவந்தது.

என்ன வாழ்க்கை இது? ஏன் இப்படிப் பாதுகாப்பே இல்லாத உலகில் வாழ்கிறோம்? எல்லாத் தருணங்களிலும் காம உணர்ச்சி ஆணின் அடிமனதில் பொங்கிக்கொண்டேதான் இருக்குமா? இந்த அற்பப் புத்தி எங்கிருந்து வருகிறது? இதைத்தான் அவனது பெற்றோர்கள் உருவாக்கினார்களா?

சந்து வழியாக நடந்து அவள் பிரதான சாலைக்கு வந்தாள். ஒருவழியாக மார்க்கெட்டைவிட்டு வெளியே வந்துவிட்டோம். இனி பயம் இல்லை. அவள் வேகமாக நடக்க ஆரம்பித்தாள். சாலைஎங்கும் போலீஸ்காரர்களாக இருந்தார்கள். வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தாள். கலவரம் காரணமாகச் சாலைகள் வெறிச்சோடிக்கிடந்தன. வீட்டை நெருங்கி வரவர... அந்தப் பையன். அவன் இயல்பாகப் பேசிய விதம், அவனது முத்தம் என்று ஒவ்வொன்றாக மேல் எழுந்து வர... மனதுக்குள் குமட்டிக்கொண்டு வந்தது.

வீட்டை நெருங்கும்போது சாவியை எங்கே வைத்தேன் என்று கூடையில் கைவிட்டுப் பார்த்தாள். கூடையினுள் உண்டியலை வைக்கும்போது சாவியை வெளியே எடுத்த ஞாபகம் வந்தது. ச்சே... எல்லாம் இந்த உண்டியல் சனியால் வந்தது. இதை ஏன் வாங்கினேன் என்று ஆத்திரமாக வந்தது. உண்டியலை எடுத்து ஆத்திரத்துடன் அருகில் இருந்த வேலிப் புதரில் வீசினாள். அது உடைந்து நொறுங்கிய சத்தம் கேட்டது. சாவி இல்லாமல்போனதால் வீட்டுப் படிக்கட்டில் இருட்டுக்குள்ளாக உட்கார்ந்திருந்தாள். ஸ்ரீதரனிடம் உண்மையைச் சொன்னால் என்ன நடக்கும் என்பதைப் பற்றியே மனதில் நினைத்துக்கொண்டு இருந்தாள். நிஜத்தைச் சொன்னால் அதுதான் உண்மையான கலவரமாக இருக்கும். எதற்காக இதைச் சொல்ல வேண்டும்? சொன்னால் மட்டும் அந்த முத்தத்தை அழித்துவிட முடியுமா என்ன?

ஸ்ரீதரனின் பைக் சத்தம் கேட்டது. இருட்டில் இருந்து எழுந்து நின்றுகொண்டாள்.

"ஏன்டி... இருட்டுல உட்கார்ந்திருக்கே? வீட்டுச் சாவியைத் தொலைச்சிட்டியா?" என்றான். பதில் சொல்லாமல் நின்றாள்.

"யாரோ ஒரு ஆளை மார்க்கெட்ல வெட்டிப் போட்டுட்டாங்க. ஒரே கலவரமாக்கிடக்கு... நீ கோட்டிக்காரி மாதிரி அங்கே போயி மாட்டிக்கிட்டியோனு நினைச்சிப் பயந்துபோயிட்டேன். உனக்கு ஒண்ணும் ஆகலையே!" என்று கேட்டான்.

"நான் மார்க்கெட்டுக்குப் போகலை. தெக்கு பஜார் போயிட்டு வரும்போது சாவியைத் தொலைச்சிட்டேன்" என்றாள்.

"உனக்கு தெக்கு பஜார்ல என்ன வேலை? வீட்ல தின்னுட்டுத் தின்னுட்டுக் கொழுத்துப் போயி ஊர் சுத்துறியா? வீட்டுச் சாவியைக்கூடப் பத்திரமா வெச்சிக்க முடியாம... என்னடி நினைப்பு? வெளியே போய் தனியா இருந்து பாரு... அப்போதான்டி உலகம் புரியும். நானே பலசரக்குல இருந்து துணிமணி, காய்கறி வரைக்கும் பாத்துப் பாத்து வாங்கிப் போடுறேன்ல... அதான் திமிரெடுத்து அலையுறே!" என்றான்.

பதில் பேசாமல் கேவிக் கேவி அழ ஆரம்பித்தாள் துர்கா. இதற்குப் போய்... எதற்கு இப்படி அழுகிறாள்... என்று புரியாமல் அவளையே பார்த்துக்கொண்டு இருந்தான் ஸ்ரீதரன்

தமிள் படிச்ச அளகு

– கி.ராஜநாராயணன்

கதை ஆசிரியர்: கி.ரா.

குற்றாலத்தில்ஒரு நாள், ரசிகமணி டி.கே.சி. அவர்களைப் பார்க்க ஒருத்தர் வந்தார்.

வந்தவர் செந்தமிழில் எங்களிடம் “அய்யா அவர்களைப் பார்க்க வந்திருப்பதாகச்” சென்னார்.

அவர் பேசுகிற விதமே அப்படி என்று தெரிந்தது.ரசிகமணி அவர்கள் இதை ரெம்ப அனுபவிப்பார்கள் என்று எங்களுக்குக் குஷி!

அவரை அழைத்துக் கொண்டு போய் விட்டோம். தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு சுத்தமான தமிழில் வெளுத்து வாங்கினார் மன்னன்.

ஆ....ஹா என்பது போலத் தலையை ஆட்டி, மீசைக்குள்ளேயே சிரித்துக் கொண்டு ரசித்துகொண்டு ரசிகமணி அவர்கள் ” ரசித்த” விதம், எங்களுக்கு அனுபவிக்கும் படியாக இருந்தது! வந்தவர் பேசி முடிந்ததும் ரெம்ப குளுமையா, ” வீட்ல சம்சாரத்துட்டயும் இப்படித்தான் பேசுவீளோ?” என்று கேட்டார்கள் ரசிகமணி! டி.கே.சி. சிரிக்காமல் கேட்டுவிட்டார். எங்களுக்குச் சிரிப்பை அடக்கப் பிரயாசைப்பட வேண்டியதிருந்தது.

இடைச்செவலுக்கு வந்த பிறகும் அந்தக் “காட்சி”, ரசிகமணி அவர்கள் கேட்ட ஞாயமான கேள்வி மனசில் கேட்டுக் கொண்டேயிருந்தது. இதை கு.அழகிரிசாமியின் மாமனாரான சந்திரகிரியிடம் அப்படியே – குற்றாலத்தில் நடந்ததைச் சொன்னேன். உடனே அவர் என்னிடம் ஒரு நாட்டுக்கதையைச் சொன்னார்.

ஒரு ஊரில், அளகு என்ற பையனை வெளியூருக்குத் தமிழ் படிக்கப் பண்டிதரிடம் அனுப்பினார்கள். அவன் ரெம்ப நாள் தமிழ் படித்து முடித்துவிட்டு ஊருக்கு வந்தான். அம்மா அப்பாவைப் பார்த்ததும், “அன்னாய், தாதாய்” என்றான் மகிழ்ச்சியுடன், பெற்றவர்களுக்கு “திக்” கென்றது!

“என்ன சொல்லுகிறான் பயல்” என்று திகைத்தார்கள்,”ஏலே அளகு, என்ன சொல்லுதே?” என்று கேட்டார்கள். திரும்பவும் அவன் அதே தோரணையில் ” அன்னாய் தாதாய்” என்று சொல்லிவிட்டு “அயிற்சி மிக்கது, அடிசில் புக்கி, சிறிதே அயனம் கொணர்க” என்றான்.

பெத்த தகப்பன் பதறித்தான் போனான்!

“அட பாவிப் பயலே! ஒன்னே தமிள் படிக்கதான்லே அனுப்ச்சோம்; நீ என்ன பாசையெல்லாமோ போசுதயே!”

அந்த ஊருக்குப் பக்கத்தில் எப்பவோ ஒரு லாட சன்யாசியை கொள்ளைக்காரர்கள் வழிப்பறி செய்து கொன்று போட்டுவிட்டார்கள். தொலைதூர வடநாட்டிலிருந்து வந்த அந்த லாட சன்யாசி போயாக மாறி யாரையாவது பிடிப்பான். அந்த லாட சன்னாசிப் பேய் பிடித்த ஆள் பேசுவது இப்படித்தான் யாருக்கும் விளங்காது, தங்கள் பிள்ளைக்கும் அதே பேய்தான் – தனியாக நடந்து வந்தபோது – பிடித்துவிட்டது என்று வருத்தப் பட்டார்கள்.

போய்களுக்கு எருக்கம் மிளாரு கொண்டு வந்து நாளு சாத்து சாத்தினால் ” போறேன் போறேன்” என்று அலறிக் கொண்டு போய்விடும். ஆகையால், எருக்கம் மிளாறு கொண்டு வரச் சொன்னார்கள்.

ஊரே கூடிவிட்டது, எல்லாருக்கும் வருத்தம் தான், ” ஆசயாய்ப் படிக்கப் போன பிள்ளையை, இப்படி பேய் வந்து பிடித்து ஆட்டுகிறதே” என்று,

ரெம்ப தூரத்திலிருந்து நடந்தே வந்த பையன்; பசிகூட அமத்த முடியலையே என்று அம்மாவுக்கு வருத்தம். காலையிலிருந்து மத்தியானம் வரை அவன் கதவைத் தட்டித் தட்டி ” அன்னாய் தாதாய், அன்னாய் தாதாய்” என்று அழைத்து அழைத்து அழுத்துப் போனான்.

பொழுது இறங்கியது. பசி பிராணன் போனது. அவனை அறியாமலேயே சத்தம் போட்டான் இப்படி ” ஆத்தோவ் வகுறு பசிக்கி, கஞ்சி ஊத்து” – மாறி மாறி சொன்னான் பலமாக!

பெற்றவர்களின் காதில் தேன் வந்து பாய்வது போல இருந்தது. பையனை எருக்கம் மிளாரினால் அடிக்க வேண்டிய அவசியம் இருக்கவில்லை. சந்தோஷம் அவர்களுக்கு, " நம்ம பெரியாட்கள் செய்த புண்ணியம், நம்ம பையனுக்குத் திரும்பவும் நல்லா பேச வந்திட்டது", என்று சொல்லி ஆறுதல் அடைந்தார்களாம்.

சுந்தரி

– மௌனி

கோடை மிகக் கடுமையாகக் கண்டுவிட்டது. எழுதுவதற்கு ஆரம்பிக்கும் எவ்வித முயற்சியும் எள்ளளவும் பயனாகாததைப்பற்றி யோசித்தேன். அதற்கு இருவகைக் காரணம் வெகு யுக்தியாகக் கண்டுவிட்டேன். மூளை, மூளையாக இல்லாது, வயல்களைப்போல் கட்டி தட்டிப் போயிருக்கலாம். அல்லது பேனாவின் மசி உறைந்து, எழுத ஓடாதிருக்கலாம். என் எழுதுகோலை எடுத்து இரண்டுதரம் வேகமாக உதறியதில், பேனாவைப்பற்றிய தகராறை ஒருவகையில் தீர்த்துவிட்டேன். ஆனால் என் தலையை உதறிக்கொண்டால், பரிதாபம் ' சிரமங்கொண்டு பன்றிக்கு வாரிவிட்டது போல் படியவைத்த எனது அழகான கிராப் தலைமயிர் சிலிர்த்து நிற்குமே என்ற ஒரு பயம் அடைந்தேன். எனினும், அப்படி இப்படி எழுத ஆரம்பித்துவிட்டேன். இப்போதுதான் எழுதுவதன் முட்டாள் தனத்தையும் கஷ்டத்தையும் உணர ஆரம்பிக்கிறேன்.

கடுங்கோடையானதினால் கொஞ்சம் இளகிய என் மூளை நன்றாக உருக்கம்கொண்டு அபார அற்புதக் கற்பனைகளை ஏராளமாகக் கொட்டுகிறது. உருகி வழியும் கற்பனைகளைத் தாறுமாறாக ஓட்டம்கொள்ளாமல் தடை செய்வதில்தான் என் முழுப் பிரயாசையும் செலுத்தவேண்டியிருக்கிறது. எனினும் அநேகர் இப்பிரயாசையில்லாமலே எழுதுவதாக எனக்குப்படுவது, அவர்களிடம் எனக்குப் பொறாமை உண்டாகக் காரணமாகிறது.

நிற்க, நடந்ததைப்பற்றி எழுதுவது என்றாலோ--அது நவீனத்திற்கு அழகன்று என்பதினால்--அது என் மனத்திற்கு இப்போது பிடிக்கவில்லை. நடக்கப்போவதை எழுதினால், அது பவிஷ்யத் புராணமாகிவிடும் என்பதனால், அதுவும் அவ்வளவு நாஸ்உக்கு இல்லை. நடக்கிறதைப்பற்றியே நான் ஒரு கை பார்க்கிறேன்.

கலியில் எது வேண்டுமானாலும் நடக்க முடியும் என்று பண்டைக்காலத்திலேயே எழுதியிருப்பதாக எனக்குக் கேள்வி உண்டு. பழைய காலத்தில் எழுதியிருந்தாலும், எழுதியிருப்பதாகக் கேள்விப்பட்டாலும், அதில் எனக்கு நல்ல நம்பிக்கை. இக் கலியில் எதுவும் நடக்க முடியுமென்றால், நான் எழுதுவதில் எனக்குக் கொஞ்சங்கூட ஆச்சரியமில்லை. மற்றும் இவ்வகைச் சிந்தனைப்போக்கில் நான் ஒரு விநோதம் கண்டேன். நடக்கிறதை எழுத வேண்டுமானால், உண்மையில் நடக்கிறதையே எழுத வேண்டுமென்பதில்லை. ஏனெனில், இக் கலியில் எதுவும் நடக்க முடியும் என்று சொல்லியிருப்பதன் நிமித்தம், ஏன் எழுதினதெல்லாம் நடக்கிறதாக இருக்கக்கூடாது ? இந்த எண்ணமே என் மனத்திற்குத் தோன்றியதை எழுதத் தைரியமாக மாறுகிறது. ஒருக்கால் நான் எழுதியதுதான் நடக்கிறதாக ஏன் இருக்கக்கூடாது ?

'பன்னிக் குட்டிக்குப் பதினாறு ' என்ற ஒரு பழைய மொழி உண்டு. பன்றிக்குட்டிக்கல்ல--பன்றிபோன்ற குட்டிக்கு, என்று ஒரு தமிழ்ப் பெரியார் அதன் பொருளை எனக்கு விளக்கியிருக்கிறார். பழைய மொழி அவ்வாறாயின், புதுக்காலத்தில், நாகரிகத்தில் தட்டுத் தடையின்றி மேலே போய்க்கொண்டிருக்கும் நமது பெண்மணிகள் விஷயத்தில், அதே மொழி புது மொழியாக எவ்வளவு தூரம் பொருத்தம் கொள்ளுகிறது ' மற்றும் பன்றிக் குட்டிக்கே இப்படி என்றால், சுந்தரி மாதிரியான குட்டிக்குப் பதினாறு வயது வந்தால்-- ?

சுந்தரி அவளுடைய பதினாறாவது வயதில் 'மிஸ் சுந்தரியாகப் ' பட்டணத்தில் படித்துக் கொண்டிருந்தாள். அவளுடைய பதினோராவது வயதில் ஒற்றைத் தலைவலி, இரண்டு கண்களுக்கும் கண்ணாடி போட்டுவிட்டுப் போய்விட்டது. மூக்குக் கண்ணாடியும், சப்பை மூக்கானால், அடிக்கடி நழுவிக் கடிவாளம்போன்று வாய்க்கு இறங்கும் என்பதில்லாது, அவளுடைய கிளி மூக்கின் பேரில் 'ஜம் 'மென்று பொருந்தி, அழகுக்கு அழகு செய்து கொண்டிருந்தது. அந்தக் கண்ணாடியுடன் அடிக்கடி அவள் மாலை நேரங்களில், காற்று வாங்கக் கடற்கரையில் உலாவுவது உண்டு.

மதுசூதனன் (இவனுக்கு விபரம் தெரிந்தபின்பே நாகரிகமான பழைய பெயரை இவன் தகப்பனார் வைத்தார் போலும்) அப்போது கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தான். இவனை இவன் தோழர்கள் பெயரை குறைத்துப்

பிரியமாக 'மது 'வென அழைப்பது வழக்கம். இவனும் மாலை வேளையில் ஆரோக்கியத்திற்காக கடற்காற்று வாங்க போவான். இப்படியாக நடந்துவருங்கால், ஒரு நாள் இவ்விருவரும் ஒருவரையொருவர் பார்க்க நேர்ந்தது. சுந்தரி பத்துப் பெண்களின் நடுவில் ஒருவளாக இருந்தும், மதுவின் கண்களிலிருந்து உண்டான காதல் சுந்தரியின் மீதுதான் பார்வையாக விழுந்தது.

'அவளுக்கு--ம் ? ' என்பதை அவன் யோசித்துக் கொண்டு தன் அறையை அடைந்தான். நிச்சயமாக அம்மங்கை, இரவில் தன் மீது விழுந்த காதலில் தவித்து, தன் விடுதி மேன்மாடியில், வேதனையில் உலாவுவாள் என்று எண்ணிக் கொண்டே, தன் அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடந்தான். மறுநாள்--- இப்படியே இருவரும் சந்தித்ததிலிருந்து, இருவருக்கும் பரஸ்பரம் 'லவ் ' விழுந்துவிட்டது.

சுந்தரி கெட்டிக்காரி. நவீன நாவல் கதாநாயகன் ஒருவன், திடாரென ஒருநாள் குறுக்காக வந்து தன்னைக் காதலிப்பான் என்று அவள் எண்ணியிருக்கலாம். மதுவே தன்னுடைய கடற்கரையில் உலவும் முழு 'டிரஸ்ஸில் ' அவளுக்கு ஏன் அப்படியான காதல் நாயகனாகத் தோன்றியிருக்ககூடாது ? மூன்று முழு உடுப்புக்களை முப்பது விதமாக அலங்கரித்து, நங்கையர் முன்னே முந்நூறுதரம் குறுக்காக அவனுக்கு நடக்க தெரியும்.

இருவர் காதலும், சிறிது காலத்திற்குப் பிறகு கலியாணமாக முடிந்தது.

மதுவின் படிப்பு முடிந்தவுடன், அவனுக்கு வேலையும் கிடைத்து விட்டது.

அவனுக்கு முப்பது ரூபாய்ச் சம்பளமானாலும், முதலில் இரண்டு வருஷத்திற்கு ஒரு தரம் ஒரு ரூபாயாக அது ஐம்பது ரூபாயாகும். பிறகு அந்த மாதச் சம்பளம் வருஷத்திற்கு ஒரு விழுக்காடு சேர்ந்து நூறு ரூபாய் ஆகும். மற்றும் நமது மதுவுக்கு ஜாம்பவான் வயது இருந்து, அவனுடைய வேலைக்கும் 'ரிடையரிங் ' காலமும் இல்லாது போனால், அவன் சம்பளம் படிப்படியாய் உயர்ந்து கொண்டே மாதம் ஆயிரம் ரூபாயாகவும் ஆகிவிடக்கூடும் '

வேலையானதும் இருவரும் சேர்ந்தே குடித்தனம் செய்தார்கள். அப்போது அவர்கள் என்னவெல்லாமோ மனத்தில் எண்ணியிருந்திருக்கலாம். 'ஐ.ஸி.எஸ். ' ஆத்துக்காரராகத் தனக்கு அகப்படவில்லையே என சுந்தரி ஏங்கியிருக்கலாம். என்னவோ சுந்தரியைத்தான் முதலில் கண்டது மாதிரி வாழ்க்கை இப்போது அவ்வளவு வசீகரமாக இல்லையே என்று ஏக்கமுற்றிருக்கலாம். எனக்கு அதெல்லாம் நிச்சயமாகத் தெரியாது. மற்றும் இவ்விஷயத்தில் என் மனக் கற்பனைகளுக்கு இடம் கொடுக்க எனக்கு இஷ்டமில்லை.

ஆனால், மாலையில் இருவரும் சேர்ந்து ஜோராக வெளியில் 'வாக்கிங் ' போகும்போது எல்லோரும் பார்த்திருக்க முடியும். அவர்கள் அப்போது பேசுவதைக் கவனித்தால், ஆங்கிலம் தெரியாதவர்களுக்கு ஒன்றும் புலப்படாது, தெரிந்த சிலருக்கும் புரியாதுதான். அக்காட்சி இயற்கை அளிக்கக்கூடிய எதையும்விட மிகவும் கண் உறுத்தும் காட்சியாகத்தான் தோன்றும்.

அடிக்கடி மதுவுக்கு ஊருக்கூர் வேலை மாற்றம் உண்டு.

எங்கேயாவது, ரயிலடியில், காலில் சிலிப்பரும், மூக்கில் கண்ணாடியும், தலையில் கட்டுக் கனகாம்பரக் பூக்கொத்து நழுவி விழத் தொங்கும் தோரணையிலும், கையில் ஒரு வெள்ளிக் கூஜாவுடனும், ஒரு சுந்தரியையும் அவள் பக்கத்தில் பெட்டியுடன் ஒரு கரப்பான்மீசை ஆணும் நிற்க நீங்கள் கண்டால், நமது தம்பதிகள்தான் வேலை மாற்றப்பட்டு, வேறு ஊருக்குப் போக ரயிலுக்கு காத்திருக்கிறார்கள் என ஊகித்துக் கொள்ளுங்கள்.

ஒரு தரம் நான் அவர்களைத் தஞ்சாவூர் 'ஜங்ஷ 'னில் பார்த்தேன். அந்த ரயிலுக்கு நல்ல கூட்டம் காத்திருந்தது. எட்டி நின்ற ஆயிரம் ஆடவர்களும், மது கடற்கரையில் காதல் விழ எப்படிச் சுந்தரியை முதலில் பார்த்தானோ, அதே பார்வையில், பார்த்து நின்றார்கள். மதுவோ வெனில் அந்த நாகரிக நங்கை தன்னுடைய மனைவி என்பதில் அநேகர் ஐயங்கொள்ளுகிறார்கள் என்பதை அறிந்தவனே போலவும், மற்றும் அதைப் பிறருக்குப் புரியும்படி காட்டுவதில் ஆவல் கொண்டவனே போலவும், அவள் அருகில் வந்து, அடிக்கடி, 'மை டார்லிங் ' போட்டுப் பேசிக்கொண்டிருந்தான். சுந்தரி, சுருங்கிய முகத்துடன், சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டிருந்ததுடன் அடிக்கடி அண்ணாந்து கொட்டாவி விட்டுக்கொண்டும், தலையை கையால் அலட்சியமாகக் கோதிக்கொண்டும் இருந்தாள்.

காதல் பூர்த்தி கலியாணம், கலியாணப் பூர்த்தி விவாகரத்து என்று எவ்வளவோ வெகு அழகான கற்பனைகளுக்கும் நான் இப்போது உடன்படத் தயாராக இல்லை.

ஒரு சந்தேகம் யாருக்கும் தோன்றலாம்....எவ்வளவு தடையிருந்தாலும் இவர்களுக்கு ஒரு குழந்தை பிறந்தால்... என்ற எண்ணம் எழலாம். ஆமாம் அது அப்பாவைக் கொண்டால், கட்டை குட்டையாக, கறுப்பாக இருக்கும். இருந்தாலும் கரப்பான் மீசையோடும், கிராப்புடனும் முதலில் இருக்காது என்பது நிச்சயம். அம்மாவைக் கொண்டாலோ, ஏன், அதன் அழகிலிருந்து நீங்கள் பார்த்தவுடனே ஊகித்துக் கொண்டுவிடலாமே ' மற்றும் அது யாரைக் கொண்டாலும், முதலிலாவது 'நாகரிக ' மற்று, தமிழில்தான் பேச ஆரம்பிக்கும் என்று நான் எண்ணுகிறேன்.

விலாங்கு

– ஜெயமோகன்

”ஐயா வணக்கம்” ”நமஸ்காரம்.க்ஷேமமா இருங்கோ…” ”இல்லீங்க…இப்ப பேட்டியெல்லாம் எடுக்கிறதுன்னாக்க அதுக்கு ஒரு மொறை இருங்குங்க…அப்டித்தான் இருக்க முடியும்…” ”அதான் சொல்றேன்…நன்னா க்ஷேமமா இருங்கோ” ”அப்டிச் சொல்றீங்களா? சரிங்க… கேள்விகளை ஆரம்பிக்கலாமுங்களா?” ”பேஷா கேளுங்கோ.. பிரஸ்னோத்தரம் இதம் ஏவம் வ பிரம்ம வதிஷ்யாமின்னு சொல்லியிருக்கே” ”யாருங்க?” ”பெரியவா…” ”பெரியவான்னாக்க?” ”ரிஷிகள்…”

”அப்டீங்களா? அய்யா இப்ப நீங்க சொன்னதை திரும்ப ஒருவாட்டி சொன்னீங்கன்னாக்க நல்லாருக்கும்..வேகமா சொல்லிட்டீங்க காதிலே உழுவல்லை” ”ஆபத்ஸ்தம்ப ஸூ த்ரத்திலே உள்ளதுடா அது.ரொம்ப ஸூ க்ஷ்மமான அர்த்தம்லாம் அதுக்கு உண்டு… அதைப்பத்தி பேச ஆரமிச்சா இன்னிக்கெல்லாம் பேசிண்டே இருக்கலாம்…நேரமில்லேன்னோ? நீ கேள்விகளைக் கேளு…”

”இல்லீங்கய்யா…நீங்க அந்த பாட்டை ஒருவாட்டி மறுபடியும் சொல்லீட்டீங்கன்னாக்க கேள்விகளுக்குள்ர போயிடலாம்…” ”அது பாட்டு இல்லை..வேதவாக்யம்…சூக்ஷ்ம ஸ்ரத்தயோடே மந்த்ரணம் பண்ண வேண்டியது…” ”ஆமாங்க..அதான் சொல்லிட்டு மேலே போகலாம்னு…” ”என்ன போட்டு படுத்தறாய்? பிரஸ்ன குணோ மனஸ் இதம் பிரம்ம பவிஷ்யாமின்னு சொன்னாக்க பிரம்மத்திலே எல்லாத்தையும் அர்ப்பணம் பண்ணிண்டு காரியங்களை செய்றதுன்னு அர்த்தம்”

”இல்லீங்க…நீங்க மொதல்லே வேற மாதிரி சொன்னமாதிரி இருந்திச்சு…அதான்” ”இல்லியே…அது வேதவாக்யம்னா…மாத்தப்படாது..அபச்சாரம்…” ”அப்டீங்களா? நான் மொதல்ல வேற மாதிரி கேட்டுதோன்னு கொழம்பிட்டேன்…” ”என்ன கொழப்பம்ங்கிறேன்? பிரஸ்ன மனோ வாக்ய குணோ தத்ர வதிஷ்யாமின்னு சொன்னா பிரம்மத்திலே எல்லாத்தையும் அர்ப்பணம் பண்ணிண்டு காரியங்களை செய்றதுன்னு அர்த்தம்” ”அய்யா இப்ப நீங்க சொன்னது முன்னாடி சொன்னது இல்ல…இது….” ”அதாண்டா சொல்றேன், பிரச்னஸ்வர நிதோ…” ”சரிங்க இப்ப கேள்விகளுக்குள்ள போலாங்களா?” ”அதான் அப்பவே புடிச்சு சொல்லிண்டிருக்கேனே…”

”சரிங்க…இப்ப பாத்தீங்கன்னு சொன்னா இந்துமதத்திலே பல பிரிவுகள் இருக்குங்க…ஒண்ணுக்கொண்ணு பல குழப்பங்கள் இருக்கு” ”யாருக்கு?” ”பலபேருக்கு இருக்கு…எனக்கும் இருக்கு” ”என்னத்தை கொழப்பம்?” ”இல்லீங்க…இப்ப பாத்தீங்கன்னு சொன்னா சைவம் பெரிசா அசைவம்…ஸாரி வைஷ்ணவம் பெரிசான்னு சிலபேரு ஆர்க்யூ பண்றாங்க” ”பாவம்…அரியும் சிவனும் ஒண்ணு இதை அறியாதவர் வாயிலே மண்ணு…இது பழம்பாட்டு…அரியும் சிவனும் ஒண்ணுண்ணா அந்த ஒண்ணு என்ன?” ”என்ன?” ”அதான் கேள்வி…என்ன? ” ”சொல்லுங்க…”

”பிரம்மம்! அதான் பரிபூரணம். பிரம்மத்திலேருந்து எதை எடுத்தாலும் பிரம்மம்தான் மிச்சமிருக்கும்… பிரம்மத்திலே எதைப்போட்டாலும் பிரம்மம்தான் மிச்சமிருக்கும்…தெளிவாச் சொல்லணும்னா பிரம்மத்தோட பிரம்மத்தைச் சேர்த்தாலும் பிரம்மம்தான் மிச்சமிருக்கும்…இன்னும் தெள்ளத்தெளிவாச் சொல்லணுமானா பிரம்மத்தோட லக்ஷம்கோடி பிரம்மத்தை ஒண்ணு சேத்தாலும் பிரம்மம்தான் மிச்சமிருக்கும்… புரியறதோல்லியோ? ”புரியுதுங்க” ”சரி மேலே கேளுங்கோ”

"அய்யா இப்ப பிரம்ம்னு சொன்னீங்க…அதை யாராலயும் ஒண்ணும் செய்யமுடியாதுன்னு சொன்னீங்க… ஆனா சிவனும் விஷ்ணுவும்…" "தம்பி சிவனும் விஷ்ணுவும் ஒண்ணும் கெடையாது…. அதெல்லாம் மானஸ •பாவங்கள். சகுண உபாஸனையிலே பரம்பொருளை அப்டி பலவகையா ரூபகம் பண்ணி ஸேவிக்கிறது நம்ம ஸனாதன மததோட வழக்கம்…" "இல்லேன்னா சொல்றீங்க? " "ஹிந்து தர்மப்பிரஹாரம் இல்லே…" "அப்டீன்னா?" "அதாவது இருக்குன்னா இருக்குன்னு அர்த்தம் இல்லேன்னா இல்ல …"

"புரியறதுங்க…இப்ப பாத்தீங்கன்னா…" "தம்பிக்குப் புரியல்லை…இப்ப இது என்னது?" "சட்டை" "இது?" "பாண்டு" "சரி..இது?" "என்னங்க நீங்க ? இது கர்சீபுங்க" "இது எல்லாத்தையும் துணிதான்னு சொன்னா நீ ஏத்துக்குவியா?". "ஆமாங்க்க" "அவ்ளவுதான்..அதைமாதிரித்தான்…துணீன்னு ஒட்டுமொத்தமாப் பாத்தா துணி…சட்டை பாண்டுன்னு பாத்தா சட்டை பாண்டு…" "சரிங்க…இப்ப ஒரு கேள்விங்க…இந்த துணிய யாரோ சட்டை பாண்டா தச்சிருக்காங்கல்ல …"

"பெரிய தத்துவக்கேள்வியா கேட்டுப்பிட்டீரே…பிரம்மத்தை யாருமே வெட்டமுடியாது தெக்க முடியாது… அயர்ன் பண்ணவும் முடியாது…அதுவெ அதையெல்லாம் பண்ணிண்டிடும்" "எதுக்கு?" ."போது போக வேண்டாமா..என்ன கேள்வி இது? அது அப்டீல்லாம் பண்ணல்லேண்ணா நாம எதுக்கு அதைப்பத்திப் பேசப்போறம்?"

"சரிங்க …இப்ப பிரம்மனா என்னன்னு சொல்ல முடியுங்களா?" "பேஷா சொல்லலாமே…அதைப்பத்தி எட்டு விஷயம்ங்கள் சொல்லலாம்னு சொல்லியிருக்கு… அதாவது அதைப் பாக்கமுடியாது, கேக்கமுடியாது, தொடமுடியாது, அதை ருசிக்க முடியாது. அதோட…" "சரிங்க…அப்ப அதை எப்டீங்க அறியிறது? " "புஸ்தகத்திலே படிச்சுதான்…அதைப்பத்தி புஸ்தகங்களிலே நெறைய சொல்லியிருக்காங்க…ஈஸோ வாஸ்யம் இதம் சர்வம்னா என்ன?"

"சர்பத்தோட வாசம் எதமா இருக்கு.." "அப்டியும் சொல்லலாம்… ஆனா பெரியவா அதை இங்க உள்ள எல்லாமே அதுதான்னு சொல்லியிருக்கா…இந்த மைக்கு நீ நீ வச்சிருக்கிர மூக்குக்கண்ணாடி அந்தா அங்க சோடாப்புட்டி வச்சுண்டு நிக்கிறானே ஒரு அசடு அவன் எல்லாமே பிரம்மம்தான்…பிரம்மனா என்னான்னு கேக்கப்படாது..ஏன்னா எல்லாமே பிரம்மம்தான்…" "ஸாரிங்க தெரியாம கேட்ட்டுடேன்.." "பாவால்ல..சின்னப்பையன் தானே நீ"

"சரிங்க…இப்ப சிவனும் விஷ்ணுவும் ஒண்ணும் இல்லேண்ணா எதுக்குங்க கோயில்லாம்? " "முட்டாப்பயலா இருக்கியே? பிரம்மத்த எப்டி கோயிலிலே வெக்ய முடியும்? அந்தக் கோயிலே அதானே? வச்சாலும் பக்தாள் கண்ணுக்குத்தெரியாதுல்லியோ? என்னத்துக்கு வம்பு…அதான் சிவனையும் விஷ்ணுவையும் வச்சு கும்பிடுறது…தம்பிக்கு சிவ வழிபாடா விஷ்ணுவழிபாடா?" "ரெண்டுமே கெடையாதுங்க" "நாஸ்திகம், இல்ல? மோரையைப்பாத்தப்பவே நெனைச்சேன்…"

"அதுவும் கெடையாதுங்க…இந்த வேலைய முடிச்சு வீட்டுக்குப்போனாக்க ராத்திரி பன்னிரண்டு மணி ஆயிரும்ங்க…அப்டியே தூங்கிடறது…காலம்பற எட்டுமணிக்கு எந்திரிச்சா குளிச்சு சாப்பிட்டுட்டு நேரா வந்திடறதுங்க.. அங்கங்க சிக்னல்களிலே ரெஸ்ட்டு எடுக்கிறதுதானுங்க…இப்டியே போய்ட்டிருக்கு…சாமி பூதம்னு ஒண்ணையுமே யோசிக்கிறதிலீங்க.." "சரி, ஹாலிடேய்ஸ்ல? "சிக்கன் எடுப்போம்…அப்றம் டிவியிலே சினிமா..மானாடமயிலாட…. ஜெயிக்கப்போவது யாரு…அப்ரம் போரடிச்சா எப்பவாச்சும் தியேட்டர் ஓட்டல்னு போறது… "

"பாத்தீங்களா, நீங்க ஒரு சரியான ஹிந்து லை•ப்லே இருந்துண்டிருக்கீங்க….நீங்க ஹிந்துதான்..இனிமே கேட்டா ஹிந்துன்னு சொல்லிடுங்கோ" "அப்டீங்களா? நமக்குத்தான் சிவன் விஷ்ணு ஒண்ணுமே தெரியறதில்லீங்களே…" "எதுக்குத்தெரியணும்?தெரிஞ்சா நீங்க சைவாளோ வைஷ்ணவாளோ ஆயிடறீங்க… ஒண்ணுமே தெரியல்லேன்னா நீங்க ஹிந்து… சாமியப்பத்தி நீங்க எதுக்கு தெரிஞ்சுகிடணும்? அவாளுக்கு ஒங்களைப்பத்தி தெரிஞ்சாபோறாதா? " "அதெப்டி தெரியும்?" "அதான் நாங்க இருக்கோமே…என்ன பூஜை வேணும்னாலும் சொல்லுங்கோ அமோஹமா செஞ்சுப்பிடலாம்"

"இல்லீங்க…எனக்கு அதெல்லாம் நம்பிக்கை கெடையாது…இப்ப கேள்விக்கு போவமுங்களா? "சரி..கேட்டுண்டே இருங்கோ" "அதாவது வந்து, இப்ப பாத்தீங்கன்னு சொன்னா சிவன் இருக்காரு…"

"பாத்தேளா, நீங்க உங்க வாயாலே சிவன் இருக்காருன்னீட்டீங்க… அப்ரமென்ன…ஒரு பிரதோஷ பூஜை ஒண்ணு பண்ணிடுங்கோ…" "எதுக்குங்க?" "ஹிந்துக்கள் அதெல்லாம் பண்ணணும்டா" "எதுக்குங்க? " எல்லா ஹிந்துக்களும் எதுக்கு பண்றா?போர் அடிக்குதேன்னுதான்… உனக்கும் போரடிக்குதுல்ல? பண்ணிப்பிடறது…"

"அய்யா இப்ப பிரம்மம்தான் இருக்கு…அதனாலே சிவன் விஷ்ணு பேதம்லாம் கெடையாதுன்னீங்க…அப்றம் பூஜை எல்லாம் பண்ணணும்கிறீங்க" "ஹிந்து தர்மம் அதெல்லாம் தெளிவாச் சொல்லியிருக்குடா… பிரம்மத்தைத் தியானம் பண்ணணும் சிவனைக் கும்பிடணும்…சிவனைக் கும்பிடறப்பக் கூட பிரம்மத்தை தியானம் பண்ணலாம். அதான் சிவனையே பிரம்மஸ்வரூபமேன்னு ஸ்துதிகள் சொல்றது…" "புரியல்லீங்க" "இப்ப சாதத்துக்கு கொழம்பு விட்டு காய்கறி தொட்டுகிடறதில்லியா அத மாதிரின்னு வை.."

"சரிங்க.. இப்ப பிரம்மம்தான் எல்லாம்னு சொல்லிட்டீங்க…அப்டீன்னா ஒருநாயும் பிரம்மம்தானா? " "பின்ன? என்ன கேட்டுட்டே? அது பிரம்மாவோட வாஹனம்னா?" "சரிங்க, பன்னி?" "அய்யோ அது பெருமாளோட அவதாரம்னா?" "அப்டீன்னா எல்லா மனுஷங்களும் பிரம்மம்தானே" "சரியா சொன்னே…உன் வாய்க்கு சக்கரை போடணும்…" "அப்ப சாதிவேறுபாடுகள்லாம் இந்துமதத்லே இருக்கப்பிடாதுதானே…" "இல்லியே… இந்துமதத்திலே எங்க சாதிவேறுபாடு இருக்கு?" "அப்டிச்சொன்னா என்னங்க?" "தம்பி ஹிந்துஸமூஹத்திலேதான் சாதிவேறுபாடெல்லாம் இருக்கு…"

"இருந்தாலும் எல்லாருமே பிரம்மம்னு இந்துமதம் சொல்லுது…அப்ப எதுக்குங்க சாதிவேறுபாடு? எல்லாத்தையும் ஒண்ணா ஆக்கிடலாமே" "தம்பி இதே கேள்விய ராமகிருஷ்ண பரமஹம்ஸர்ட்டே ஒத்தன் கேட்டான். எல்லாமே பிரம்மம்னா நான் ஒங்கள அடிக்கவான்னான். அவரு ஒரு கதை சொன்னார், ஒரு யானை கோபமா ஓடிவந்திச்சாம். அப்ப ரோட்டிலே போன ஒரு வேதாந்தி நானும் பிரம்மம் அதுவும் பிரம்மம் பயப்படறதுக்கு ஒண்ணுமில்லைன்னு நேரா போனான்.யானை அவனை தூக்கிபோட்டுட்டுது…அவன் அழுதிண்டே போயி அவனோட குருகிட்டே நியாயம் கேட்டானாம்…அவர் சொன்னாராம் டேய் முட்டாளே, அந்த யானைக்குப்பின்னாலே யானைப்பாகன் ஒத்தன் ஒத்திப்போ ஒத்திபோன்னு சத்தம்போட்டுண்டெ வந்தானே அதை நீ ஏன் கேக்கல்லை, அவனும் பிரம்மம்தானேன்னு"

"அதேமாதிரிங்கிறீங்களா?" "தம்பி… எல்லாம் பிரம்மம்தான். ஆனாக்க மனுங்கிற ஒரு பிரம்மம் சாதிகளைப் பிரிச்சு வச்சிருக்கிறாரே..அந்த பிரம்மம் சொல்றதை எப்டி மீற முடியும்?" "மீறுங்கன்னு நான் சொன்னா?நானும் பிரம்மம் தானே? "கண்டிப்பா…ஆனா மனு பெரிய பிரம்மம். எல்லா பிரம்மமும் சமம்னாலும் சில பிரம்மம் கொஞ்சம் கூடுதலா சமம்னு ஒரு துரை சொல்லியிருக்கான்..கேள்விப்பட்டிருப்பாய் ஜார்ஜ் ஆர்வெல்னு சொல்லுவாங்க"

"அப்ப பிரம்மத்திலே எல்லாத்துக்கும் ஒரு வழி இருக்குங்கிறீங்க…" "ஆமா தம்பி…சின்ன வயசிலே நாம என்ன பண்ரோம்? .வெளியே போய் வெளையாடுறப்ப சண்டை பிரச்சினைன்னு வந்தா ஓட்டமா ஓடியாந்து ஆத்துக்குள்ள ஒளிஞ்சுகிடுறோம் இல்லியா? பிரம்மம்னா நம்ம வீடுமாதிரி…எப்ப வந்தாலும் உள்ள எடமிருக்கும்… வேணுங்கிறப்ப வெளியே போய்க்கலாம்..என்ன நான் சொல்றது?"

"அய்யா இப்ப வெளியே நெறையபேர் பார்ப்பனிய ஒழிப்புன்னு பேசறாங்களே அவங்களை பாத்து நீங்க பயப்படுறதில்லியா?" "எதுக்குப் பயப்படணும்…?வாவாளை தனியாப்பாக்கிறப்ப தம்பி நல்லாருக்கியா, ஒரு தோஷம் இருக்கிறாப்ல தெரியறதேன்னா கிலியாகிடுவாங்க… பிரதோஷம் ஏகாதசின்னு பணத்த வாங்கிண்டு காதோடு காது வச்சமாதிரி வந்திடவேண்டியதுதான்…" "சாதி ஒழிப்பு பத்தி நீங்க என்ன நெனைக்கிறீங்க?" "சாதி ஒழிய வேண்டியதுதான்…அப்பதான் பிராமணா பிராமணா அல்லாதவாங்கிற ரெண்டு வர்ணம் மட்டும் இருக்கும்…லோஹம் க்ஷேமமா இருக்கும்"

'நொம்ப தெளிவா பேசினீங்கய்யா நன்றி" "ஆசீர்வாதம்" "நேயர்கள் இதுவரை கேட்டது இஞ்சிக்குடி பஞ்சாட்சரம் அவர்களுடன் நேர்காணல். நடத்தியவர் பிரபு வெங்கடேஷ். வணக்கம்."